உ

சிவமயம்.

# கோட்டூர் நயினார் குளுவநாடகமும், பள்ளும்.

நாக. ஆ. ராம.

கிருஷ்ணஞ் செட்டியாரவர்கள்,

தேவகோட்டை.

1930

O-,892 K.
N30
186078

உ

சிவமயம்.

# கோட்டூர் நயினார்

# குளுவ நாடகமும், பள்ளும்.

ஷடியூர் ஆண்டியப்பப் புலவன் மகன்

**வெள்ளையப் புலவன்**

இயற்றியன.

---

இவை

கோட்டூர்க் கோவில் அருதார்

தேவகோட்டை மகா-௱-௱-ஸ்ரீ

**நாக. ஆ. ராம. கிருஷ்ணஞ் செட்டியாரவர்கள்**

அநுமதிப்படி

தேவகோட்டை

**சொ. வேலுச்சாமிக் கவிராயரால்**

முன்பதிப்புக்கிணங்க

ஷடியூர்

வைசியமித்திரன் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றன.

---

பிரமோதூத௵ ஆவணி௴

1930.

உ

சிவமயம்.

## கோட்டூர் நயினார்

# குளுவ நாடகம்.

### காப்பு.

சீர்சிறந்த கோட்டிபுரஞ் சிறந்து மேவுந்
        திருவகத்தீசுரர் பாதந் தினமும் வாழ்த்திப்
பேர்சிறந்த புகழ்வளரு நயினார் மீதிற்
        பெருகுதமிழ்க் குளுவநா டகத்தைக் கூறத்
தார்சிறந்த ஞானம்வளர் யோக வாக்யத்
        தந்திமுகத் தெந்தைவயத் தம்ப கும்பக்
கார்சிறந்த வைந்துகரத் தொந்தியானுங்
        கணபதிபொற் பதநிதமுங் காப்பதாமே. 1

திங்களிசை கோட்டிபுரஞ் சிறந்து மேவுந்
        திருவகத்தீ சுரர்பாதந் தினமும் வாழ்த்தி
நங்கைசிவ சங்கரிநா ரணி வராகி
        நளினமலர்ப் பதந்தொழுது நயினார் மீதின்
மங்களஞ்சேர் தென்பொதிய மென்னுந் தெய்வ
        மலைக்குளுவ நாடகத்தின் வளமை கூறக்
கங்கைமதி சடைக்கணிந்த வானார் மைந்தன்
        கணபதிபொற் பதநிதமுங் காப்ப தாமே. 2

செந்திருசேர் கோட்டிபுரஞ் சிறந்து மேவுந்
        திருவகத்தீ சுரர்பாதந் தினமும் வாழ்த்தி
விந்தைபயில் சுழுமுனையி னடுவதாக
        வீற்றிருந்து நடம்புரியு நயினார் மீதிற்

சுந்தரமெய்ஞ் ஞானமலைக் குளுவன் றன்னைத்
தொகையறிந்தே யுலகுதனிற் பாடியாடச்
சந்ததஞ்சேர் வேதாந்தத் தமிழ்வல் லோர்கள்
தாளிணைப்பொற் பதுமமலர் சரணந் தானே. 3

## தோடையம்.

பூவும்வர்சமும் பொருந்திமேவிய
புகழ்க்தென் னாலைநன்னாட்டினில்
நாவுநான்மலர் வாணியருள்பெறு
நயினார்மீதினி லருமையாக்
கோவுமூவருந் தேவருந்துதி
குளுவநாடகங் கூறவே
ஆவுமேவுமாம் வேங்கடேசுர
ரருமைச் சேவடி காப்பதாம். 4

திருவினருணிறை தென்னாலைப்பதி
செழிக்குங் கோட்டியூரீச் சுரன்
தருவுமணிகளு நிகரவந்துமெய்த்
தவமதருணயி னாரின்மேற்
குருவினருள் பெறு தமிழினிசைபயில்
குளுவநாடகங் கூறவே
கருவிலுயிரென வளர்சதாசிவக்
கண்மணிப்பதங் காப்பதாம். 5

சீர்வளருந்தென் னாலைநாடுபொன்
செழிக்குங் கோட்டியூரீச்சுரன்
வாலவுருவமதாகி வளர்தரு
மாலையணிநயி னாரின்மேற்
கோலமொடுசிவ காமியருள்பெறுங்
குளுவநாடகங் கூறவே
ஞாலமுறுதிரு மூலர் தருகுரு
நமசிவாயமுங் காப்பதாம். 6

பொன்மலர்த்திரு புகுந்தென்னலையிற்
பூதலக்குரு வானவன்
தன்மலெட்சுமி வாசமாகிய
தருவைசேரகத் தீச்சுரன்
சொன்மலர்த்தொடை யணியுநாயகன்
சுருதிமேனட மாடிமேல்
நன்மனந்தருங் குளுவநாடக
நவிலவென்குரு சரணமே. 7

## மங்களம்.

மங்களம் சுபமங்களம் நயினார்க்கு

நந்தியகத்தீசருக்கும் நவகோடிசித்தருக்கும்
தந்தியுருவானவர்க்கும்-மங்களம்
சதாசிவநயினருக்கு மங்களம்.
சந்திரவதனர்க்குந் தமிழ்சொரிவாணர்க்கு
மந்திரசொரூபருக்கு-மங்களம் சுப
மங்களம்நயினருக்கு மங்களம்
பானுமதிதனக்கும் பரிசுத்தானவர்க்கும்
வானும்புவியிலுள்ளோர்க்கு-மங்களம் சுப
மங்களம்நயினருக்கு மங்களம். 8

## அகவல்.

சீர்தருகமலத் திருவளர்ந்தோங்கப்
பேர்பெறுஞானம் பெறுஞ்சிவயோகர்கள்
ஆரியநாத ரகத்தீச்சுரர்மேற்
கூறியகல்விக் குளுவநாடகத்தைச்
சீரியர்முன்னே சிறியேனுரைக்குங்
காரியமெதுபோற் கருதினனென்னில்
அரவமாடுதல்கண் டவனிநாகங்கள்
சிரமதுதூக்கி யாடுஞ்செயலாம்
பத்தர்சித்தர் பாவலர்மேலவர்

உத்தமர்சித்தத் துட்கொண்டிதனை
மேருவிற்சிறந்த விளக்கதுவாகப்
பாரினிற்பெரியோர் பகர்ந்தினிதுணாச
அரிபிரமாவு மவனியின்முன்னாட்
டிருவடிமுடியுந் தேடியுங்காணான்
ஈரெட்டுப்புத்திரி இடையனும்பெற்றுச்
சீரிட்டுவந்து சிவாலயந்தொழவே
பிள்ளையிலுதித்த பெண்சுதைதன்னை
இன்னதுஞ்சுதனென விலங்கக்கொடுத்தோன்
க்ருவாயமுதங் கதித்துருவேறத்
திருவளர்ந்தருளிய சிவமணிமார்பன்
கங்கையுஞ்சடையுங் கமண்டலம்புலித்தோல்
செங்கைமான்மழுவுஞ் சிறப்புடன்றரித்தோன்
பதாதிகள்சூழும் பராபரவஸ்து
சதாசிவப்பொருளாய்த் தானின்றிடுவோன்
அடியவர்க்கருளு மநந்தநேத்திரத்தான்
படியவர்தமக்கொப் பானபாத்திரத்தான்
கருணையம்பலத்தான் கயிலாயநாதன்
அருணாசலத்தி லதிகமாய்நின்றோன்
அருந்தவருகந்த வருள்சோமகிரியில்
மருந்ததிகமதாய் வளரானைமலையான்
தேனுடன்பால்கனி சிறப்புடன்பெருகி
மாநிதிவளரு மணிமுத்தாநதியான்
சாலவேமுனிவர் தவசுகந்தருளிய
மேலவர்புகழும் விரிசிலைநதியான்
வேந்தரும்புவியின் மிக்கமாதவரும்
பாந்தமாய்ப்பணியும் பாண்டிநன்னாடன்
பொற்பதக்கமலப் புவனேசுவரிக்கு
அற்புதன்கோட்டூர்க் கதிபதியானோன்
வாசிநற்பரியான் மாவேதப்பரியான்
பூசனைபெருகிய பூங்குஞ்சரத்தான்
ஐந்தருமிகவும் அருளதாய்நின்ற

இந்திரப்பதவி யிடபக்கொடியோன்
அத்தமேவளரு மவனிமுழுவதுஞ்
சத்தசாகரம்போற் றமிழ்முரசுடையோன்
காவிமாமலரிற் கலந்துறைக்ரளிகா
தேவிமாதுடனே செழித்திடுமாணையான்
மதுசொரிமலர்பதி வானவர்க்கெல்லாம்
முதுமொழிபெருகிய மூலாங்குசத்தான்
தாசர்கள் பணியுஞ் சவுந்தரநாயகி
பாசமகற்றும் பராபரிபங்கன்
கும்பமுனிக்குக் குணங்களிகூர்ந்தோன்
செம்பொனுடனைய தென்னுடளிக்குந்
தனுவுடனுணைத் தளபதிசெங்கோல்
மனுபதிகெவுரி வல்லவராசன்
படையினில்விசையன் பாவலர்க்கினியன்
கொடையினிற்கன்னன் குமணனைப்போலவும்
இந்திரனைப்போல் யாவரும்புகழ
வந்தருள்கெவுரி வரம்பெற்றுயர்ந்தோன்
ஐந்தருநிகர்த்த வரசர்சிகாமணி
செந்திருமெச்சுந் தென்னுலைநாட்டில்
அன்னதயாநிதி அறிவுளோர்க்கெல்லாஞ்
சொன்னதானஞ் சொரிந்திடுங்கோட்டூர்
அதிகதபோதன ரனுதினம்புகழ
மதிமுகவிலாச வரமருள்சோதி
வேதநூல்பரவும் வித்தககுருவாம்
ஆதலாலந்த அகத்தீச்சுரரைப்
பூசனைபுரிந்து பொற்பதகமலம்
நேசமாய்ப்பணிந்து நின்றருச்சனைசெயத்
தானிகருடனே சதுமறையோர்களு
மாநிலத்துதிக்க வந்தபராபரன்
ஈசரைப்பணிந்து இயல்புடனெங்கும்
வாசமாங்கோட்டூர் வளருமாண்டியப்பன்
மைந்தன்வெள்ளையன்சொல் வடிதமிழ்க்கினிய

சந்தோடமாகத் தவமருள்புரிந்து
இருதயநிறைந்து ஏகமாய்நின்ற
சருவதயாபரன் தழைக்குநாடெல்லாம்
மார்க்கண்டேயர்பெறும் வரமுங்கொடுத்துப்
காக்கின்றகோட்டூர்க் கயிலாயநாதர்
செயம்பெறவளருந் தென்னலைநாட்டின்
மயம்பெறுங்கிரியின் மாரியும்பொழிந்து
திருமணிமுத்தமா நதிவிரிசிலைநதி
வருமணிவிளையும் வாவிகளெங்கும்
பெருகிநிறைந்த பெருமையைக்கண்டு
தீர்க்கமதாகச் சிறந்துகொக்கரித்துக்
கார்க்குலமெழுந்து கவிந்தெனத்தோன்ற
வானத்தெழுந்து வருகின்ற பட்சியைக்
கானக்குறவன் கண்டுபின்மகிழ்ந்து
நயம்பெறச்சிங்கனை நாடியேகூட்டி
வியம்பெறப்பட்சி வேட்டையாடுதற்குக்
குறுங்கண்ணிநெடுங்கண்ணி கூழைக்கடாக்கண்ணி
உறுங்கண்ணிமுக்கூட் டுள்ளாங்கண்ணியும்
பெருங்கண்ணிநாரை பிடித்திடுங்கண்ணியும்
அருங்கண்ணிகுருகுந ளகப்படுங்கண்ணியும்
ஆரவேதொண்ணூற்று றந்தரப்பட்சிகள்
சேரவேசிக்குஞ் சிவயோகக்கண்ணியும்
பேசியேயண்ட பேரண்டபட்சியை
வீசியேபிடிக்க விரித்தவார்வலையும்
சினத்தையுமனத்தையுந் திருத்தியகண்ணியும்
அனத்தையுமிறுக்கிய தாகநூற்கயிறும்
வாசியேபிடிக்க மதிநறுநெய்யுடன்
பூசியமூலர் புகழ்ந்திடுமருந்தும்
செங்கையிற்பிரம்புஞ் சிற்றரிவாளும்
மங்கைதந்தருளிய மாத்திரைக்கோலும்
காசினிமதிக்கக் கமண்டலத்துடனே
மாசினைநீக்கி மகிழ்வுடனெடுத்து

மருமலர்ப்பெண்கள் மயலதுபூணத்
திருநுதன்மைவகைத் திலகமுமணிந்து
எழுசமுத்திரமு மெட்டியேகடக்கக்
குளிசமுற்றெழுதிக் கொண்டையின்முடித்துச்
சிறந்தநற்பரியின் செம்பொனாலமைத்த
குறந்தனக்கிசைந்த குவளையுட்கட்டும்
இடுக்கமற்றிருக்கும் இயல்திருமேனிக்
கடுக்கனுமணிந்து காதிலேதுலங்கப்
பருமணிவயிரம் பதித்தமோதிரமும்
திருமணித்தாழ்வடம் சிறந்தகைவளையும்
பலவகைநகையும் பண்புடனணிந்து
நிலவுபோன்மெய்தனில் நீறதுபுனைந்து
கோரக்கர்கற்பமுங் குளிர்ந்தகள்ளாக்கும்
நேரவுட்கொண்டு நெறியதாய்நடந்து
ததிமிதியெனவே தானவர்துதிக்க
மதிவளர்பொதிகைக் குளுவன்வந்தனனே. 9

விருத்தம்.

தலைமலையருவிநீழற் சதுராரிதங்கைபாகர்
மலரணிநயினாரென்றும் வளருந்தென்னாலைநாட்டிற்
சிலமணிக்கச்சைபூண்டு தெய்வத்தைப்பணிந்தெந்நாளுங்
கலைபலவறிந்துபேசுங் காரணக்குளுவனானே. 10

## குளுவன் தரு.

பல்லவி.

காரணக்குளுவனானே பறவைசேர்க்குங்
காரணக்குளுவனானே.

அநுபல்லவி.

காரணக்குளுவனானே கயிலைநயினாரென்னும்
ஆரணத்துறைகள்மெச்சும் அரியதென்னாலைநாட்டிற்-காரணக்

சரணங்கள்.

ஞாலம்புகழும்பரி பாலனமிர்தகுண
லோலன்தமிழுக்கனு கூலன்மிருந்தவிந்திர
சாலன்யமனையுதை காலன்மறைபயிலும்
மூலன்முகினயினர் சீலன்தென்னலைநாட்டிற்-காரணக்

ஆரனுகந்தமணி மாரன்பொருள்வளர்கு
பேரனுயர்ந்திடுகோட் டூரன்சிவந்தமலர்ச்
சீரன்பரிபுரகெம் பீரன்சிவகலையாய்
யாரானயினர்குரு வாரன்தென்னலைநாட்டிற்-காரணக்

அத்தனமாருல கத்தன்வளரும்பரி
சுத்தன்மெய்ஞ்ஞானம்விளை வித்தன்சிதம்பரத்தில்
நிர்த்தநின்றுடும்வல சித்தனமிர்தமுண்ட
மத்தனயினரெனும் முத்தன்தென்னலைநாட்டிற்-காரணக் 11

விருத்தம்.

கரிதிடமானசேனை காலவெங்கனல்போற்பொங்கி
விருதிடுமருவலரரை வென்றதென்னலைநாட்டில்
நரிபரியாகச்செய்த நயினருக்கடிமைபாகிப்
பரிசிடச்சித்திபெற்ற பச்சிலைசொல்லுவேனே.

பச்சிலைத் தரு.

பல்லவி.

பச்சிலைநானறிவே னடய்யே பச்சிலைநானறிவேன்

சரணங்கள்.

பச்சிலைநானறிவேனடய்யே
பார்ப்பதிபாகர்நயினர் தென்னட்டினில்
உச்சிதமாயுச்சி வாசல்திறக்கவும்
ஊமையெழுத்துப தேசங்கறக்கவும்

தற்செயல்வாய்வின் னமுதமருந்தவும்
தன்னையறிந்து தலைவனைப்போற்றவுஞ்
சச்சிதானந்த வெளியொளிகாணவுந்
தாண்டியகண்டத்தை மீண்டுவரக்கண்ணிப்
பச்சிலைநானறிவேன். 1

தக்கவர்போற்றிய மிக்கநயினார்
தற்பரமெய்ஞ்ஞான வற்புதநாட்டினில்
முக்கவராக மதம்பொழியானையை
முச்சந்திவீதிகண் டச்சமறக்கவும்
சொக்கரச்சந்தன்னை யக்கினிதன்னிலே
தூபமதாக்காமல் மாமணியாக்கவும்
மிக்கபுவனம்பத மண்டபேரண்ட
மேற்கொள்ளக்கேசரி மார்க்கமருந்திது
பச்சிலைநானறிவேன். 2

பாக்கியசாலி திருவகத்தீசர்
பராபரரான சடாதரனாட்டினில்
யோக்கியமாகச் சிவயோகஞ்செய்து
உடலுக்குயிரை யுறவாயிருக்கவும்
வாக்கியமாகப் பதினெண்கலைகளும்
வண்மையதாக வடிதமிழ்சொல்லவும்
தாக்கியல்பாகவே நாற்பத்துமுக்கோணச்
சக்கரவட்டத்தைச் சாத்தவுமண்டுகைப்
பச்சிலைநானறிவேன். 3

சத்தமுனிவர்கள் சித்தமகிழ்ந்திடுஞ்
சாம்பமூர்த்திபொன் னம்பலநாட்டினில்
கற்றவர்போற்றிய மூலகுருபதங்
காத்தவர்பங்கினிற் காயாசம்வாங்கவும்
பத்தர்கயிலை மலைக்கு நடக்கவும்
பாஞ்சாலியைக்கண்டு பாலமுதுண்ணவும்
அத்தர்கிழக்கையு மேற்கையுமேனின்று
அந்தரங்கத்தி லவருடம்பிற்சோதிப்
பச்சிலைநானறிவேன். 4

வாசம்பொருந்திய வாலைசொரூபன்
    வளருமகத்தீச மாதவர்நாட்டினில்
வீசம்படிபச்சம் பாசாணம்பத்து
    விராகனற்கந்தக மேனிறையோர்பலம்
தேசம்புகழ்பச்சை நாவிநிறைவீசம்
    சேங்கொட்டையெண்பது நூற்றெட்டுக்கொட்டையும்
ஈசன்பகவீர வெல்லாமுஞ்சாப்பிட்டு
    எண்ணும்பதினொ றிருக்கவுமின்சுதைப்
                பச்சிலைநானறிவேன். 5

ஆரண மானதென் னுலைநன்னாட்டினி
    லானைக்குட்டியுடன் பேசிக்கொண்டாடவும்
வாரணஞ்சூழு மதுராபுரியிலும்
    மாதவர்போற்றுஞ் சிராப்பள்ளிதன்னிலும்
பூரணமாகிய காசிநதியிலும்
    புண்ணியதீர்த்தத் தனுக்கோடிதன்னிலுங்
காரணமாகவே யங்கங்குபோனவர்
    கண்டோமெனவந்து கொண்டாடவுஞ்சோதிப்
                பச்சிலைநானறிவேன். 6

பாருண்மெய்ஞ்ஞானம் பகருநயினார்
    பாக்கியசாலி பராக்கிரமநாட்டினில்
காருஞ்சிறந்துமும் மாரிபொழியவுங்
    காற்றுவந்தேழுற்றந் தூர்த்துத்தெளிக்கவுஞ்
சாருமறலி தனைத்தளைபோடவும்
    சந்திரசூரியர் தான்சுற்றியோடவும்
சீருஞ்சிறந்தருள் முப்பத்துமுக்கோடி
    தேவரும்மூவருஞ் சிந்தைமகிழ்நாகப்
                பச்சிலைநானறிவேன். 7

பச்சைப்பசுங்கிள்ளை மெச்சுங்கனிமொழிப்
    பார்ப்பதிபங்க னகத்திசர்நாட்டினில்
செச்சையதாய்வந் தெதிர்த்தமருவலர்
    சேரவும்வந்தகத் திசைப்போற்றவும்

ஒச்சைப்படாம லுலகத்தைவெல்லவும்
ஊழ்வினையைநிர்த் தூளியதாக்கவும்
மிச்சமதாக மலையைப்பொன்னுக்கவும்
வித்தைவினோதங்கள் மெத்தமெத்தச்செய்யப்
பச்சிலைநானறிவேன். 8-13

## விருத்தம்.

கருமுறையுருவதான காரணப்பொருளாய்நின்ற
தருமுறைநயினாரீசர் தழைத்ததென்னலைநாட்டில்
திருமுறைவாசியோகஞ் சிறந்தகோட்டூரைவாழ்த்திக்
குருமுறையாகவந்த குறநரசிங்கனானே. 14

## சிங்கன் தரு.

### பல்லவி.

சிங்கனும் நானே—குறநர சிங்கனும் நானே.

### சரணங்கள்.

சிங்கனுநானே திருவகத்தீசுரர்
செய்புந்திருவள மெய்யர்நன்னாட்டினில்
பங்கயவாவியில் மச்சம்பிடித்துப்
பரமனுக்கேவற் பணிவிடைகள்செய்யுஞ்—சிங்கனும்நானே.

வாலையைப்போற்றுந்தென் னலைநன்னாட்டினில்
வளர்ந்தருள் கோட்டூ ருகந்தகுளுவனுக்
காலையமாய்ச்சிவ யோகக்கண்ணிகொண்
டன்புடனேபிடிச் செம்புசுமக்கின்ற—சிங்கனும்நானே. 2

தேசம்புகழுந் திருவகத்தீசரைச்
சேவடிபோற்றுந்தென் னலைநன்னாட்டினில்
பாசமகற்றும் பராபரைபாசத்தைப்
பற்றிக்கதிர்மதி சுற்றியும்வைக்கின்ற—சிங்கனும்நானே. 3

பாலிக்குஞ்செல்வம் பகருஞ்சவுந்தரப்
பார்ப்பதிபங்க ரகத்தீசர்நாட்டினில்
ஆலிக்குநாவி லறுசுவையும்மதி
யன்னமும்பாலு மடைவுடனுண்கின்ற—சிங்கனாரனே. 4-15

## விருத்தம்.

வாசிநிலையறியாமற் குருநாதனென்போர்
 மார்பாணிநயினாரெந் நாளுநின்று
நாசிநுனிதன்னிலே நடனங்கண்ட
 நயகுணவானகத்தீசர் நல்கும்நாட்டில்
தேசிபாரடாரவயலிற் கண்ணியேற்றித்
 தெளிவானபட்சியெல்லாம் சிக்கிக்கொள்ள
வேசிமனமகிழ்ந்தநர சிங்காவிப்போ
 விரைந்துவாசமபமிது விளம்பக்கேளே. 16

## இதுவுமது.

பரிக்குகந்ததென்னவனுக் கருள்தானீந்து
 பரமருளுநயினார்தென் னாலைநாட்டில்
வரிக்குலங்கள்வாவிதனி லிசைகள்பாட
 வலம்புரிச்சங் கினமுரலுஞ் செய்கடோறுந்
திருக்கையுடன்கெளிறுழுவை மசரிகெண்டை
 தேளியுடனாரான்மீன் றன்னைக்கொத்தி
விரிக்குவிரைமூக்கிலிட்டுக் கிக்கியென்று
 வெகுகோடிபட்சிவரக் கண்டேனய்யே. 17

## பட்சித் தரு.

### பல்லவி.

கண்டேனடய்யே பறவைகள் கண்டேனடய்யே

### சரணங்கள்.

கண்டேனடய்யே திருவகத்தீசர்
 கருணைபுரியுந்தென் னாலைநன்னாட்டினில்

அண்டர்தொழுந்திரு மூலக்குளவயல்
அத்திநெடுங்கன் அடிமடைச்செய்யினில்
மண்டலத்திற்பஞ்சந் தாங்கிமுக்கணை
வாய்க்காலதிலும் பொழுதுகண்டானிலும்
தண்டமானங்கொண்டு தாராவும்புள்ளுந்
தத்திவிளையாடி மெத்தமெத்தவரக்—கண்டேனடய்யே. 1

கோத்திரம்வாழக் குருவருளேதருங்
கோலாகலராகத் தீசுரர்நாட்டினில்
தோத்திரமாநதிக் கோட்டேரமடுவினிற்
றுள்ளவுமேசதி ரெண்ணுபிரங்கோடிச்
சூத்திரமான பறவைகளெல்லாமுஞ்
சுற்றிச்சுற்றிவந்து கெத்துக்கெத்தென்னவே
சாத்திரவேதன்செய் தன்னிலிறங்கித்
தணிந்தேயுயர்ந்து பறந்துவரவரக்—கண்டேனடய்யே. 2

முத்தமிழ்பெற்று வளருமகத்தீசர்
மூர்த்தியடைக்கலங் காத்தநன்னாட்டினில்
நற்றமிழ்சேர்கின்ற பூங்குடிக்கண்மாயில்
நான்முகப்பட்சிகள் மேன்முகமாகவே
சித்தமகிழ்ந்தண்டம் பேரண்டந்தாண்டிச்
சிறையடிக்கொண்டு பறையடிக்கின்றது
மற்றப்பறவைகள் கும்புகும்பாகவே
வானத்தெழுந்தருக் கோணச்செய்யில்வரக்—
கண்டேனடய்யே 3

தாக்குடன்வாக்குந் தவமும்பலிக்குஞ்
சவுந்தரநாயகி பாகர்நன்னாட்டினில்
நோக்குடனேவந்த மூலக்குளவயல்
நுண்ணறிவாமறு கோரைச்செய்தன்னிலும்
ஆர்க்கும்புகழ்தரு மாவடிமேட்டுச்செய்
அரசுவயக்கலு நாச்சியார்செய்யிலும்
மேக்குடன்பட்சி யிருபத்தோராயிரம்
மேலாறுநூறும் ஏழும்பெவெளியாகக்—கண்டேனடய். 4-18

### விருத்தம்.

அடுத்தவர்க்குந் தொடுத்தவர்க்கும்பிடித்தபேர்க்கு
மதித்தவமுடையவர்க்கு மருமையாகக்
கொடுத்தமொழியகற்றிமதி ஞானங்காட்டுங்
கருணையத் தீசுரர்தென்கயிலைநாட்டில்
தொடுத்துவளர் வல்லூறும் ஆந்தைகாகஞ்
சொற்பெரிய கோழிம்பிளுடனேகூடி
மடுத்தனிலேயிரையருந்தி இனங்கள்கூட்டம்
வகைக்குவகைபறவை மெத்தவருகுதையே 19

### தரு.

#### பல்லவி.

வருகுதையே பறவைகள் வருகுதையே

#### சரணங்கள்.

வருகுதையேதென் கோட்டூருகந்தருள்
மாதவராமகத் தீசர்நன்னாட்டினில்
பெருகும்வானவர் கோட்டூர்க்கண்மாயிலும்
போனவெம்பெரு மான்திடலோரமாய்ச்
சொரிகுரும்பை விளையுந்தலையிலே
சுற்றிக்கயல்களைக் கொத்தியருந்தியே
குருகுசெங்கருங் காலிமடையானுங்
கொக்குவக்காவுடன் முக்குளிப்பானிதோ—வருகுதையே.

பாவலர்போற்றிய கோட்டூர்நயினார்
பராபரமான சடாதரர்நாட்டினில்
காவலர்சூழுந் திருமூலைவாவியில்
காரணமாம்பரி பூரணந்தன்னிலே
ஆவலுடன்வந்த சுக்கிலபட்சிகள்
அங்கங்கேயோடி யடங்கியெழும்பியே
மேவலர்சாய விரட்டித்துரத்திய
வெட்டிச்செய்தன்னிலே கட்டுமட்டாகவே—வருகுதையே

OFFICE OF THE ... 16 MAR 1931 ... MADRAS

சீரும்புகழுந் திரவியமுமருள்
செய்யுநயினார் மெய்யர்நன்னாட்டினில்
ஆரும்புகழ்ந்துகொண் டாடுமரசணி
அன்பர்கள்வீதியில் கெம்பீரமாகவே
காருஞ்சிறந்துநென் மாரிவிளையுஞ்செய்
கண்டதெல்லாம்பட்சி மண்டுகந்தேடியே
பெரும்பறவை பனிரெண்டுமீரெட்டாய்ப்
பேசாமற்றனுமே கூசாமலேயிதோ—வருகுதையே. 3

மேகஞ்செறிகுழல் வாகுபொருந்திய
மெல்விநல்லாள்குரு' வல்விசவுந்தரம்
பாகம்வளரு நயினாரெந்நாளும்
பரிந்தேயுகந்து வளர்ந்திடும்நாட்டினில்
ஏகம்பரான பராபரமூர்த்தி
இசைந்திடுமூலக் குளத்துவயல்தனில்
தாகமடக்க விளையுநற்சீரகச்
சம்பாச்செய்தன்னிலே கும்புகும்பாகவே—வருகுதையே.

விருத்தம்.

உருவாகிமனமொருமித் தடிமையாகி
யுடலாவிபொருண்மூன்று முகந்தோர்க்கெல்லாம்
பிறவாதநெறிகொடுக்கு நயினாரெங்கள்
பெருமையுள்ள குருவளருங்கோட்டூர்நாட்டில்
குறமானமொழியுரைக்குஞ் சிங்காமூலக்
குளங்கோர்வைதனிலெழுந்த கொடிக்காற்கிட்ட
திறமானவளர்கோரைச் செய்கள்மீதிற்
றெளிவாகப்பட்சிவந்து சேருதையே. 21

தரு.

பல்லவி.

சேருதையே பறவைகள் சேருதையே.

### சரணங்கள்.

சேருதையேபெரு கும்நவகோடி
சித்தர்புகழ்ந்திடு முத்தர்நன்னாட்டினில்
பேரும்பெருகிய கோட்டூருதன்னில்
பெருமையகாரப் புருமையச்செய்யினில்
வாருமெனப்பொற்றக் கோரையசையாமல்
வண்மையுடன்பட்சி யுண்மையதாகவே
ஆரும்புகழ்ந்துகொண் டாடும்விசும்பிலே
ஆடிப்பறவைகள் கூடிக்குலாவியே—சேருதையே. 1

கோலாகலம்வளர் கோட்டூரின்மேவிய
குஞ்சரம்போற்றிய சஞ்சீவிநாட்டினில்
மாலானபாலமு தூறியவாகாச
வாவியிலேதினம் மேவியெழுந்தது
சேலானமச்சந் தனைக்கொத்தித்தின்றுபின்
சிங்காரமாய்ப்பட்சி வங்காரமாகவே
மேலானஒட்டடை வட்டச்செய்தன்னிலே
வேடிக்கையாகவே கூடிக்குலாவியே—சேருதையே. 2

அக்கரவம்புனைந் தம்பலத்தாடி
யருள்கொடுக்குமகத் தீசர்நன்னாட்டினில்
உக்கிரமாகியே ஆனைவயக்கலில்
ஓங்காரவட்டத்தில் ரீங்காரச்செய்யினில்
முக்கிரமாக வளர்ந்தபறவைகள்
மூதண்டகூட முகடதுமுட்டியே
சக்கரவட்டச் சதாசிவன்செய்யிலே
தாணிக்கொண்டேபட்சி யாணிக்கையாகவே—சேரு. 3

பங்கயமேனியுஞ் செங்கனிவாயும்
பசந்தகழுத்து முயர்ந்தவதனமும்
இங்கிதமாம்வாலை சவுந்தரநாயகி
ஏகபராபரி பாகர்நன்னாட்டினில்

சங்கையதாகவே கும்பிக்குளவயல்
தாட்டிமையாகிய மேட்டுமடைச்செய்யில்
மங்களமாகவே யானைக்காலுள்ளாலும்
வம்புதும்புவிட்டுக் கும்புகும்பாகவே—சேருதை. 4-22

## விருத்தம்.

சிந்தையுள்ளே சிவப்பொருளைக்கொண்டுமேதக
சித்திசெய்வாருண்டில்லை யென்றேதானும்.
சந்தேகமாய்த்திரிந்தே யலைவார்காணச்
சமயகோளரியாகத் தானுய்வந்து
பந்தையம்போட் டவரவருக் கறிவைக்காட்டிப்
பகருமகத்தீசர்பண்ணைச் செய்கேடாதும்
விந்தையதாயிரையருந்தி யனேகங்கோடி
விதம்விதமாய்ப்பறவைவந்து மேயுதையே. 23

## தரு.

### பல்லவி.

மேயுதையே பறவைகள் மேயுதையே.

### சரணங்கள்.

மேயுதையே மதியையணிந்து
விளங்கும்நயினர் விதரணநாட்டினில்
பாயிருணீக்கிய கோட்டூருதன்னிலே
யரிசரிவாழும் பெரியமடைவயல்
ஆயிரஞ்செய்க்கிசை காயாம்வயக்கலில்
ஆரான்மீனைத்தின்று சீராகக்கொத்தியே
தாயுடன்குஞ்சுகள் பேடுடன்சேவலும்
தத்திவிளையாடிப் பெத்தாவயக்கலில்—மேயுதையே. 1

தூயன்கனிசொரி வாயன்குகந்தரு
சுத்தமிலங்கிடத் தூற்றபாரபான்

நாயந்தழைத்து வளர்ந்தருள்நாட்டினில்
நவமணிநெல்விளை மூலக்குளத்தினில்
தோயந்தனைத்திறந் தாறுமாலட்டமுஞ்
சுத்தியேபாய்ந்துசென் மெத்தவுண்டாகியே
வீயந்தனிலமு தாகவிளைந்திடும்
விந்தைதனிற்பட்சி கொந்துகொந்தாகவே—மேயுதையே.

வித்தையும்புத்தியு மெத்தவுமேதரும்
வெள்ளைவிடையேறும் வள்ளல்தென்னாட்டினில்
சித்தையுஞ்சீரையு முற்றறிமந்திரஞ்
சிந்தைசெய்தேவகு விந்தையதாகவே
பித்தரிணைமலர் பற்றியகொக்கது
பேர்ந்துவெளியிலே பாய்ந்தோடிப்போகாமல்
பத்தையுமுத்தொழி லாகவுமேகண்டு
பக்குடன்வக்காவு மிக்கமூலத்திலே—மேயுதையே. 3

அன்னநடையும் பிடியிடையுந்திகழ்
அமுதகுணமு மழகுசவுந்தரம்
வன்னமயில்மின் னழகியநாயகி
மாதுவளருந்தென் னுலகன்னாட்டினில்
நன்னயமாகவுங் குண்டலிவாவியில்
நாற்பத்துமுக்கோணத் துள்ளா னுங்கூடியே
சன்னபின்னலாக வுன்னிப்பறந்துபின்
சந்திரனுடிய மந்திரப்பொய்கையில்—மேயுதையே. 4

## விருத்தம்.

குறுமுனிவனுடனருள்சேர் பதினெண்பேர்க்குங்
கோடானுகோடிசித்தர் கூடினோர்க்கும்
அறுபத்துநாலுமட பதியுள்ளோர்க்கும்
அருள்கொடுத்துநிதிவளரு நயினார்நாட்டில்
உறுதியெழுவகைவிளையும் வயல்கள்தோறும்
உகந்துயிரையருந்திமிக விரைந்துகூடிக்

இருடைகலம்வளர்ந்தோங்கப் பறவையெல்லாங்
கிளர்பதமாய்வருகுதுகேள் பாரப்பாரையே. 24

தரு.

பல்லவி.

கண்பாரையே பொறுபொறு கண்பாரையே.

சரணங்கள்.

கண்பாரையே திருவகத்தீசர்
கருணைவளரும் குருபார்நாட்டினில்
உண்பானுக்கேற்றநற் சம்பாவிளைந்திடும்
உட்காணிநம்பியா மூக்காணிவட்டத்தில்
கும்பாயிருந்த பறவையெல்லாங்கிளை
கூடிக்குலாவி யுலாவித்திரிந்தது
சம்பாநடத்திய தாழையடிமடைத்
தச்சன்செய்யில்வந்து மெச்சிக்கொண்டாடுது—கண்பா. 1

சத்தியவாசக முற்றகத்தீசுரர்
தானுகவந்த சதாநந்தர்நாட்டினில்
வித்தைகளும்நவ சித்தும்விளங்கும்
விளக்கொளியான மணிக்குளந்தன்னிலே
அத்திநயினார் மடைக்கரையோரமாய்
ஆலஞ்செய்நாச்சியார் செய்யிலிறங்கியே
முத்துவிளையுஞ் சங்கான்வயக்கலில்
முக்குளிப்பான்வந்தே யெக்களிப்பாகுது—கண்பாரை. 2

அந்தந்திருந்திய செந்தமிழேதரும்
ஆதிபராபரஞ் சோதிநன்னாட்டினில்
சொந்தமுடனகத் தீசர்வயக்கலில்
துலங்கியநெல்விளை கொம்மட்டிச்செய்யினில்
விந்தஞ்சொரூபம தாகப்பறவை
விரைந்திடுங்கொண்ணூற்று றந்தாப்பட்சிகள்

ஆந்தக்கெடாமலே சந்தம்பொருந்தவே
ஆகாசமாய்வந்து மேககளம்பாடுது—கண்பாரையே. 3

சீலத்தகுதிச் சிவப்பொருளைச்சிந்தை
சேர்ந்தடியார்களுக் கென்றேயடியருட்
பாலைக்குலுக்கிப்புகட்டிய பார்வதி
பங்கனெங்கோனகத் தீசுரர்நாட்டினில்
காலனைவென்ற கோட்டூரிலுகந்தருள்
கண்மாய்க்கிசைந்த வரியாவயக்கலில்
ஞாலத்துடனே குருகுமீனைக்கொத்தி
நாரையுமன்றிலுஞ் சேராகமேயுது—கண்பாரையே. 4.25

விருத்தம்.

தெளிவானமனமுடைய வறிவுள்ளார்க்குத்
தெத்தெடுத்தேயுபதேசித் தர்த்தம்வாங்குங்
சுழிகூழைவஞ்சர்நெஞ்சங் கலங்கியேங்கக்
கருத்தறிந்துபக்குவங்கண் டருள்தியாண
வொளிகாணத்தந்தருளு நயினார்நாட்டி
லுற்றகுளவயல்தனிலே கண்ணியேற்றிக்
கெளிமேளப்பறவையெல்லாஞ் சிக்கிக்கொள்ளக்
கிருபையுடன்கண்ணிகொண்டு வாடாவையே. 26

தரு.

பல்லவி.

கண்ணியைக்கொண்டாடா பறவைகள் தன்னிலேமேயுதடா

சரணங்கள்.

கண்ணியைக்கொண்டாடா கபிலைநயினார்
கருணைபுரியுந்தென் றலைநன்னாட்டினில்
புண்ணியமாநதி யாலஞ்செய்யூருணி
பொன்னன்வயக்கல் காம்பைவெட்டுக்கெய்

தென்னிற்சிறந்துநெல் மெத்தவிளைந்திடுஞ்
　சுத்தமிலங்கிய நித்தன்வயக்கலில்
பண்ணைவயக்கலில் பறவைகளெல்லாம்
　பதுங்கிப்பதுங்கி யொதுங்கிவருகுது—கண்ணியைக். 1

ஏழைக்கிரங்கிய வேழமுகத்தோனை
　ஈன்றகுருபாஞ்ண்டவ னாட்டினில்
வாழைக்கனியும் பலாச்சுளையுங்கட்டு
　மாம்பழமுங்கனிந் தேவழிந்தோடியே
வேளைக்குதவிய சீரகச்சம்பா
　விளைந்திடுபண்ணைச்செய் சேற்றுச்செய்தன்னிலும்
கோழைக்குரல்விட்டே யாளரவங்கண்டு
　கொக்கரித்தேபட்சி யெக்களிபாடுது—கண்ணியைக். 2

சிங்காரமான் திருவத்தீசர்
　செழித்திடும்நாட்டி லுதித்தபறவைகள்
சங்கையில்லாத மயிலன்னங்கூடியே
　தாட்டிமையாகிய கோட்டேரணியிலுந்
தங்கம்விளையும் அளிசம்வயக்கலில்
　தத்திவளர்ந்து பறந்தேபிருந்து
பங்கயவாவி யரசணியோரமாய்ப்
　பட்சியெல்லாம்வந் துச்சிதம்பாடுது—கண்ணியைக். 3

ஆறுங்குளமு மதிகதவமு
　மருளும்பெரிய தனமுஞ்சுகமுடன்
பேறும்பதினாறு பேருடனென்னையும்
　பெற்றதிகச்சம்பாத் துற்றமெய்ஞ்ஞானத்தில்
கூறுபகிர்ந்த சவுந்தரநாயகி
　கோலவிழிமட மாதுநன்னாட்டினில்
மாறுபடாப்பர மாநந்தவெள்ளத்தின்
　வாய்க்கரையிற்பட்சி சேகரமாகுது—கண்ணியைக். 4-27

விருத்தம்.

மயசொருபமானசெக சோதிமேரு
　　மலைவாழுநயினார்தென் னாலைநாட்டில்

புயபலஞ்சேர்கோட்டூர முதலுடெல்லாம்
புகழ்பெரியகுளங்களுடன் வயல்கள்தோறும்
பயமற்றவேபசிதீரச் சுயங்களைபாடிப்
பானுமதியமுதுடன்பாற் பாக்யஞ்சேரச்
செயமதுள்ளபறவையெல்லாஞ் சிக்கிக்கொள்ளத்
தெளிவாகக்கண்ணிதனைத் திருத்திடையே. 28

## கண்ணித் தரு.

### பல்லவி.

திருத்திடையேதிருத்தடா சிவ சிந்தையதாய்க்கண்ணி திருத்தடா

### சரணங்கள்.

கருத்தெனும்மூலக் குளத்திலேவயல்
கண்டுகொண்டே சதுர்த்தளத்திலே
உருத்தெனவட்ட மிருத்தடாசிவ
யோகத்தின்கண்ணியைத் திருத்தடா—திருத்திடை. 1

அக்த்தியதீர்த்த மாடியே யஞ்சு
அக்கரமந்திரம் பாடியே
செகத்தினிற்குரு வாமடா தினம்
தெரிசிக்கக்கலி போமடா—திருத்திடையே. 2

கணபதிபூசை செய்யடா சிந்து
கவிக்குநாயக மெய்யடா
அணவுந்தென்னலைப் பதியடா வகத்
தீசுரர்பாதமே கதியடா—திருத்திடையே. 3

மந்திக்கருப்பரைப் போற்றடா கால
வயிரவர்பதம் வாழ்த்தடா
தெந்தெணக்கண்ணியை நாட்டடா சிவ
யோகத்தின்கண்ணியை மூட்டடா—திருத்திடையே. 4

வாசிக்குதிரையைப் பிடியடா நேத்ர
மணிக்குளமண்டப வடியடா

தேசிபராபரஞ் சோதியாக் திருச்
செல்வநயினரு மாதியாம்—திருத்திடையே. 5

முக்கூட்டுக்கண்ணியை யெடுத்துவா அதை
முன்னேதிருத்தியே கொடுத்துவா
பக்கிட்டுலகம் போர்க்கடா எங்கும்
பாராதே கண்ணும் பார்க்கடா—திருத்திடையே. 6

மூச்சந்தியைமுன்னே பார்த்துக்கொள் எதில்
மூவிழைக்கண்ணியை யேற்றிக்கொள்
அச்சமில்லாமலே காத்தடா பட்சி
அகப்படுங்கண்டு போற்றடா—திருத்திடையே. 7

உள்ளானின்கண்ணியை ஊணியே பறந்
தோடாமலே மெள்ளப் பேணியே
புள்ளானதெல்லாமும் பிடியடா சிவ
போதகமேதினம் படியடா—திருத்திடையே. 8

மங்கைமலர்ப்பதம் பணியடா சுளி
வாய்மடையை மெள்ளக் களியடா
அங்கேயுமேகொக்கு வருமடா கண்டு
ஆசரித்தாலொளி தருமடா—திருத்திடையே. 9

மண்டலமுண்டதை முட்டியே நின்று
வந்தவிந்தைவழி கட்டியே
அண்டபேரண்டத்தைப் பிடியடா அதற்
காகாசவலையை யடியடா—திருத்திடையே. 10

சித்தர்புகழுங்கோட் டூரினும்பண்ணைத்
தெற்கிலுப்பையின் தூரினும்
சுத்தவெளிப்பட்சி பெரிதடா அதைச்
சூட்சமாய்க் காணுவ தரிதடா—திருத்திடையே. 11

காடைக்கட்டுச்சுற்றிக் கட்டியே குறுங்
காடையைத்தானும் விரட்டியே

மாடப்புருக்தட்டு வையடா பட்சி
வந்திடுஞ்சோதனை மெய்படா—திருத்திடையே. 12

தாராவருகுது நேரதா யிதோ
சாணூரணி யோரமா
யீராறுகண்ணியைப் பதியடா வகத்
தீசுரனைநிதந் துதியடா—திருத்திடையே. 13

கோரம்பைவயலில் கூடுது பட்சி
கொக்கரித்தேயிரை தேடுது
ஆரம்பமாகவே நெருக்கடா அருங்
கண்ணியெல்லாம்வைத்துப் பெருக்கடா—திருத்தி. 14

முசுத்துமாமடைக் கரையிலுஞ் சடை
முனியன்தாவுச்செய் வரையிலும்
பசித்திடாமலே கூடியே அன்னப்
பட்சியெல்லாம் விளையாடியே—திருத்திடையே. 15

புளியடிச்செய் வரப்புடன் வெகு
பூரிதமாகவே சிறப்புடன்
தெளிவுடன்பட்சி வருதடா அதைச்
சீக்கிரமாய்ப்பிடி விருதடா—திருத்திடையே. 16

மண்பாடுதன்னிலே வருதடா பட்சி
வாரதெல்லா மெத்தப் பெரிதடா
கெம்பீரமாகவே பிடியடா சிவ
கிருபையைத்தினம் படியடா—திருத்திடையே 17

ராமநாதன்செய்க் கதிரிலும் பட்சி
நாடியேயெல்லைச்செய்ச் சதிரிலும்
காமர்ரிப்பட்சி வருகடா அதைக்
கண்டுபிடிவெகு விருகடா—திருத்திடையே. 18

சிட்டுக்குருவிகள் வருகுது கிளை
சிங்காரமாகவே பெருகுது

கட்டுவலைமண்ணிற் பதியடா பட்சி
கனக்கவகப்படு மிதியடா—திருத்திடையே. 19

அன்னமுந்தாராவுங் கூடியே குஞ்சுக்
காகமேவயிரை தேடியே
சன்னல்பின்னலாகத் தானடா வந்து
சாடுதுநீபிடிப் பாயடா—திருத்திடையே. 20

அத்திக்குருந்தடி வட்டத்தில் அதோ
ஆலாவருகுது கிட்டத்தில்
சுற்றியேகண்ணி நாலுணடா அதைச்
சூச்சமதாய்ப் பிடியாணடா—திருத்திடையே. 21

நவ்விலாறுகண்ணி குத்தியே சிவ
நாச்சியார்செய்யையுஞ் சுற்றியே
மவ்வுடன்கண்ணி யீரைந்தடா வூன்றி
வைத்தொரு கொடியில்வந்தடா—திருத்திடையே. 22

ஈராறுகண்ணியை நாட்டடா ஒரு
ஏகமாய்ச்செய்யிலே கூட்டடா
ஓராறும்ஈரைந்துஞ் சேரடா வெகு
உற்பனமாங் கண்டுபாரடா—திருத்திடையே. 23

வெற்றியாய்ச்சோற்றுச்செய் முடுக்கிலே நெடு
மேலச்சம்வயக்க லடுக்கிலே
சத்திநீலகண்டஞ் செய்படா கண்டு
தன்னிருகண்ணியை வையடா—திருத்திடையே. 24

ஐயனார்வயக்கலில் மேயிது அரு
ளாநந்தவெள்ளத்திற் பாயிது
குய்யமதாய்நின்று பாரடாவருங்
கூழைக்கடாவெல்லாஞ் சேரடா—திருத்திடையே. 25

உருவமடைக்கண்ணி பரப்பியே சத்தி
உள்ளாணும் அங்கங்குதிரப்பியே

திருப்பழஞ்சாறு கட்டடா பட்சி
சிக்கெனவேபார் புரட்டடா—திருத்திடையே. 26

ஐம்பதுகண்ணியும் வாய்ச்சது அதில்
அங்கேயொருகண்ணி யேச்சது
இன்பகத்தீசுரர் குருவடா ஒன்றும்
இல்லாருக்கென் திரு வுருவடா—திருத்தி. 27-29

விருத்தம்.

ஆரணப்பொருளாய்நின்றே யந்தணர்போற்றுகின்ற
பூரணநயினரீசர் புகழுந்தென்னுலைநாட்டில்
காரணக்குளுவனூன்றுங் கண்ணியில்விண்ணுளாடுஞ்
சீரணிபறவைவந்து சிக்கிக்கொண்டிருக்குதையே.

தரு.

பல்லவி.

சிக்கிக்கொண்டதையே பறவைகள் சிக்கிக்கொண்டதையே.

அநுபல்லவி.

சிக்கியேகொண்டது தென்னுலைநாட்டினிற்
சிறந்தருள்கோட்டூருகந்தசிதம்பரர்
மிக்கதிருவடி மேலுந்தரிசித்து
வெள்ளைக்குருகுகள் கள்ளப்படாமலே—சிக்கிக் 1

சரணங்கள்.

மண்டலம்போற்றிய கோட்டூர்நயினர்
வளர்ந்தருள்நாட்டி லுகந்தபறவைகள்
குண்டலிவாவிக் குளம்வயல்தோறுங்
குலாவியுலாவித் திரிகின்றபட்சிகள்
கண்டதெல்லாம் நயினரைத்தரிசித்துக்
காரணமாம்பரி பூரணந்தன்னிலே

பண்புடனேநர சிங்கன்திருத்திய
பண்புடன்கண்ணியில் நம்புதலாய்வந்து—சிக்கிக் 2

யோகஞ்சிறந்திடுந் தென்னலை நாட்டினில்
உகந்ததிருவகத் தீசரைப்போற்றியே
மோகமதான குருகுசெங்காலியும்
முக்குளிப்பானுஞ் சிலகவுதாரியும்
நாகணவாய்ப்புள் ளுடன்கம்பத்தான்கோழி
நாரையுங்கொக்குஞ் சிறகியுந்தாராவும்
வேகமுடன்நர சிங்கன்திருத்திய
வித்தாரக்கண்ணியில் தந்திரமாய்வந்து—சிக்கிக் 3-31

விருத்தம்.

தஞ்சமென்றுவந்தவர்க்குந் தமிழ்வல்லோர்க்குந்
தவமருளுங்கோட்டிபுர நயினார்நாட்டில்
வஞ்சமனக்கவலைகொலை மாயைதீர்த்து
வரமருளுங்குருபதத்தை மனத்துட்கொண்டு
அஞ்சுவனப்பூங்காவிற் கண்ணியேற்றி
யகப்பட்டபட்சியெலாஞ் செலவுசெய்யச்
செஞ்சொல்வளர் குளுவனுஞ்சிங்காரமாகச்
சிங்கனுக்கங்கேதுமொழி செப்பினனே. 32

தரு.

தந்தனத்தான தனதனத்தானன தனதானனு.

பல்லவி.

சுந்தரமூர்த்திக்குத் தூதுசென்றவகத் தீசர்—கூடற்
ரேகையம்பாளுக்கு வாருடனேகுண நேசர்
மந்திரபாடத்தை மூன்றுகேதசகாலம் பாடிக்கொள்—பட்சி
வன்மையுடன்விற்று நன்மையதாய்த்தனந் தேடிக்கொள். 1

அஞ்சலர்போற்றும் நயினர்புகழெங்கும் வாசிக்க—வுனக்
கன்புடனேதிரு நீறுதருவார் பூசிக்கொள்
பஞ்சவர்ணக்கிள்ளை நூறுகொடுத்துநீ கும்பிடு—பூச்சிப்
பட்டுடன்சேலை தருவாரிருபதம் நம்பிடு. 2

வன்னமயில்மின் னழகியநாயகிக் கன்பு—இரண்
டன்னப்பட்சியை அறிவுடனீகொடு தெண்பு
குன்னக்குடியில் வளர்குமரேசரும் அறிவார்—நூறு
வன்னமயில்கொடு சொன்னமெல்லாம்வாரிச் சொரிவார். 3

அத்திமுகவனை நித்தந்தொழுதுகொண் டேத்து—மூலச்
சித்திவிநாயகர் சேவடியைத்தினம் போற்று
மற்றுமுள்ளபல தெய்வங்களுக்கெல்லாம் ஐயே—வெகு
சித்தமகிழச் சிறப்புநடத்திவை மெய்யே. 4

தேசம்புகழும் கவுரிவல்லேந்திர ராசன்—நிதி
சித்தமகிழ்கல்வி கற்றவர்க்கேயருள் போசன்
வாசமதாய்வெள்ளைத் தாராவிலேநூறு கொண்டுபோ—துரை
வச்சிரப்பதக்கங்கடுக்கன் தருவாரதைப் பூண்டுகொள். 5

கோட்டிபுரியில் மகாசனங்கள் விளையாட—அஞ்சு
கொஞ்சுங்கிளிமயி லைம்பதுவுங்கிளைகூடக்
கூட்டியேமுன்செல்லப் பின்புசென்றேசிங்கா நில்லு—நீயுங்
கும்பிட்டொருசெப் உம்பளம்வாங்குவாய் செல்லு. 6

அஞ்சினபேருக்கருள் புரிவார்கோட்டியூரார்—அகத்
தீசுரரைத்தினம் அர்ச்சனைசெய்யு முதாரர்
பஞ்சாச்சரப்பொரு ளென்னும்வடுகநாதய்யர்—வெகு
பாக்கியமந்திர நாதவரோதயன் மெய்யர். 7

பேரண்டப்பட்சியி லீரைந்து முன்னே கொடுத்திடு—எங்கும்
பேராகவேடிக்கை பார்க்கவிருகை குவித்திடு
பாரண்டமிக்கொரு மாநிலமும்பளம்விடுவார்—பால்
பாக்கியஞ்சேரு நயினரைக்கும்பிட் டடைவாய். 8

சீலமாங்கண்ணனைத் தென்னாலைநாட்டுக்குச் சிங்கா—நூறு
சேவற்குருகுசெங் காவியில்நாற்பதும் அங்காய்
சாலமுடனே தழைக்கக்குறிசொல்லிக் கண்டுகொள்—வெகு
சம்பிரமதாய்நூறு பொன் தருவாரதை யுண்டுகொள். 9

மால்விசயரெகு நாதக்கருவண னீன்ற—ரதி
மன்மதனும்ராம சந்திரவெண்மதி போன்ற
ஞாலம்புகழ்பரி பாலனுக்கோர்வெள்ளைத் தாரவும்—ரெண்டு
நாகணவாய்ப்புள்ளுங் கொடுத்திடவர்கள் கூரவும். 10

அன்பெனும்மயிலாண்டி கிளைவளர்ந்தோங்கக்—கிள்ளை
ஐம்பதுநீகொடுத் தும்பளம்மென்மேலும் வாங்க
விம்பவகத்தீசர் தீர்த்தக்குளம்படிக்கட் டுள்ளோர்—வெகு
மிக்கபணியிரு கைக்குவளைவரும்பெட் டுள்ளோர். 11

சிந்தைமகிழ்கோட்டு ரம்பலம்ஒன்பது கூத்தர்—செல்வஞ்
சேரும்பறவை யனங்கொடுத்தால மூர்த்தம்
உந்தனக்கேயுப சாரங்கள்செய்திடு வார்கள்—ஊரார்
அம்பலகாரருந் தங்கவளையிடு வார்கள். 12

மங்களமாகவே நயினார்பதத்தைப் பணிந்து—அவ
வாசற்றிருநீற்றை மெய்யிற்சவ்வாதுட னணிந்து
சங்கையில்லாத மனோன்மணிபூசைக்குத் தானும்—வெள்ளைத்
தாராவும்போதையும் வேணுமடா அனுப் பாரும். 13

மூலத்தில்வித்தாய் முளைத்தெழுந்தகுரு பதத்தை—கண்டு
முத்திபெறவென்று சித்துக்களாகிற விதத்தை
மேலைத்தெருவையுங்கண்டு தரிசிக்கச் சொல்லுவார்—வெகு
விந்தைக்கரைகண்டாற் சண்டனையுங்கூட வெல்லுவார். 14

பஞ்சவர்ணக்கிள்ளை யஞ்சையுமொன்றாகச் சேர—நீதி
பராபரமான சுழிமுனையிற்கண்டு பாரு
வஞ்சியெனுங்குறச் சிங்கிவரவாத் தோணுது—இப்போ
வந்திடுஞ்சோதனை சந்தோஷமாய்க்குறி காணுது. 5-33

## விருத்தம்.

நீதிநெறிதென்னாலை நாடெங்நாளும்
நிறைந்தசெல்வ மிகவாழ்ந்துநேசமாக
ஆதிபராபரநயினார்க் கடிமையாகி
அவதரித்தகுளுநவனுக்கங் கேவல்செய்யச்
சோதிமுகமானசிவ யோகக்காரி
சொற்பெரியபூசணமும் பூண்டுகொண்டு
மாதுகுறமொழியுரைத்துச் சிங்கிதானு
மாங்குயில்போற் சபையில்வந்து தோன்றினாளே. 34

## சிங்கி தரு.

### பல்லவி.

சிங்கியும் வந்தாளே மாங்குயில்போல் நர
சிங்கியும் வந்தாளே.

### சரணங்கள்.

கிங்கிணிசிலம்பசையக் கீதராகங்கள்பாடி
மங்களக்குளுவருக்கு வாக்கியமுத்தஞ்சொரியுஞ்—சிங்கியும்வந் 1

வேண்டியவரங்காடுக்கும் விமலசத்திசர்பதம்
பூண்டுதவம்பெற்றவே புவியிற்கொண்டாடியே—சிங்கியும்வந் 2

செங்கைவளைகுலுங்கச் சிற்றிடைக்கொடியசைய
பங்கயமுகமிலங்கப் பனுவற்றமிழ்கள் சொல்லிச்—சிங்கியும்வந் 3

அன்னம்போல்நடையழகும் ஆலிலைபோலேவயிறும்
தென்னாலைப்பதியெந்நாளுஞ் செழிக்கக்குறிகள் சொல்லிச்—சிங் 4

## விருத்தம்.

வந்தகுறச்சிங்கிதனைக் கண்டுமேதான்
மனமகிழ்ந்துசிங்கனுமங் கேதுசொல்வான்
சிந்தைமகிழ் தனுதினமு நயினார்பாதச்
செம்மலர்பூண்டருந்தவமுஞ் செய்பேற்றைத்தான்

விந்தையுடன்பொருள் தனமு மருள்வதாக
வெகுவிதமாய்வந்துநின்ருய் சிங்கியுன்றன்
சந்தேகமுரைத்திடென்று வாதுபேசித்
தானவளுக்கேதுமொழி சாற்றுவானே. 36

## தரு.

என்னைவிட்டுப்பிரிந் தெங்கேயடிபோனுய் சிங்கி வெகு
நன்னயமாய்க்கோட்டி யூரிலிருந்தேனுன் சிங்கா. 1

பொன்னோலைகாதுக்குத் தந்ததும் ஆரடிசிங்கி யெங்கள்
பூலோகமாதழகிசுவரியாள் தந்தாள் சிங்கா. 2

அன்னக்கொப்புவர்ண மூக்குத்திதந்ததார் சிங்கி கோட்டூர்
அக்கிரகாரத்திற் குறிசொல்லிவாங்கினேன் சிங்கா. 3

மின்னுந்திலதஞ் சிந்தூரப்பொட்டேதடி சிங்கி வெகு
விந்தையதாமுக வசீகரமோகனஞ் சிங்கா 4

சந்திரன்போலமெய் யெல்லாமுஞ்சொர்னமாய்த் தானே யுனக்
கெந்தவிதமிது வந்ததைச்சொல்லடி மானே 5

சுந்தரக்கண்ணைத் தென்னுலைநாடு தழைக்கக் குறி
சொன்னேனதில்வெகு பொன்னகைதந்தார் பிழைக்க 6

ஓரஞ்செழுத்து முறவானதெவ்விடஞ் சிங்கி அது
ஒன்பதுவாசலுண் டாகியவீட்டினிற் சிங்கா 7

ஈரஞ்செழுத்தையு மெந்தனக்கேயுரை சிங்கி அது
ஏகமொருக்காலே யானதெல்லாங்குறச் சிங்கா. 8

கோட்டூர் நயினரைக் கும்பிட்டனுதினம் போற்றடி கும
ரேசரையும்வள்ளி யம்மையுந்தினம் வாழ்த்தடி 9

நாட்டுக்கெல்லாம்வெகு பேர்பெற்றதென்னுலை நாடுவெகு
நன்னயமாய்த்தமிழ் சொல்லிக்கொண்டேகூத் தாடு 10

பங்கயவாவிக ளெங்கும் பொன்மாரியே பொழிந்துபால்
பாக்கியஞ்சேர்ந்து வளர்ந்திடவேகுறச் சிங்கா 11

மங்களமாகவே நாடுநகரமுஞ் செழிக்க இனி
வாழிசொல்லிவிளை யாடவேணும்குறச் சிங்கர் 12

தென்னுலைநாடு செழித்திடவுமிக் வாழி திருக்
கோட்டிபுரம்பிர மாலயமுநிதம் வாழி. 13

பொன்னுபரணி யழகியநாயகி வாழி வெகு
பூசுரர்தேசிக ருங்குருவும்மிக வாழி. 14-37

## வாழி விருத்தம்.

மூலமுதற்சுவாதிட்டான முதலும்வாழி
முத்திதரும்பூரகமனு கதமும்வாழி
சீலமுள்ளவிசுத்தி மயேசுரமும்வாழி
சிறந்தசதாசிவமு மனேன்மனியும்வாழி
தாலமிசைவிளங்குபதி னுலாம்விட்டிற்
றத்துவங்கள்தொண்ணூற்று றதுவும்வாழி
ஆலமுண்டநாதன்சதா சிவனும்வாழி
ஐம்பத்தோ ரட்சரமும் வாழிதானே. 38

அண்டபகிரண்டமுத லருளாய்நின்ற
ஆதவனுந்தேவர்களு மருள்வாழி
குன்றைநகர்க்குமரேசர் வாழிவாழி
குறுமுனிவர்நவகோடி சித்தர்வாழி
மண்டலமெல்லாம்புகழுஞ் செங்கோன்முத்து
வடுகநாதேந்திர துரை வாழிவாழி
தண்டமிழ்சேர்கோட்டூரி னயினரீசர்
சந்நிதியெந்நாளுநிதம் வாழிதானே. 39

## குளுவ நாடகம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

நயினர் துணை.

# கோட்டூர் நயினர் பள்ளு.

## காப்பு

### கலிப்பா.

அஞ்செழுத்து மூன்றெழுத்து மட்டதிக்கு மூவணை[illegible]
நெஞ்சுறைகோட் டூர்நயினர் நீடுமனைப் பள்ளிசைக்கப்
பஞ்சவர்ணக்கோடு பதிதிகழு மூலமணிக்
குஞ்சரத்தி னற்பதமுங் குருபதமுங் காப்பாமே.

## நூல்.

பூவொடுமிசை கூறினர்தேறினர்
பூமகள்திருத் தாள்பணிவேள்பணி
பூவைசேரிடை பிங்கலைசுழியெனும்-பொருளானோர்

ராவொடுபகல் சின்மயப்பொருளெனு
நாவலர்பணி நாதசதாசிவன்
நாசியிலிரு திருவிளையாடல்செய்-நவநீதர்

காவொடுகனி நவரசமினிதருள்
காரணிபரி பூரணிநீறணி
காரிமையழ குள்ளவள்பணிபத-கைலாசர்

பாவொடுதமிழ்க் கானவர் வானவர்
பாதிமாமதி சூடினராடினர்
பாதசீர்நயி னாரணைப்பள்ளிசை-பகர்வாமே. 1

## வேறு

அனமேவிய ஆதிமெய்நயினர்
அருள்சேர்கயி லாசமெய்நயினர்
அழகாலுமை பாகமெய்நயினர்-அணைமீதே

கனமேதருமா திருக் கோட்டிநன்
　　னகர்மேவிய கருணையும்புகழும்
　கதிர்சீர்மதி பரவுமெய்ஞ்ஞானியர்-கல்யாணி

இனமேவிவந் தணைசெயும் புரிகுழல்
　　இயல்சேர் திரி நேத்திரிபஞ்சாட்சரி
　யெனையீன்றவ ளழகியசவுந் தரி-வரபாலர்

தனமேவிய மூலவிநாயகர்
　　சதுர்வேதவி நாயகரிருதாள்
　தலைவாசலிற் கவுரிவிநாயகர்-சரண்போற்றி. 2

முன்னாள்வரு மகத்தியமாமுனி
　　முசுகுந்தனு மாவலிநளனும்
முன்னாளிவர் பூசித்துவந்தபின்
　　முல்லாபணி நேசிக்குநயினர்

அந்நாளினி லிந்திரகுலாதிபர்
　　அரசானகண் ணணையினிற்கூடியே
அந்நாளினிற் கீழணைமேலணை
　　அதிகண்ணணை யேனும்பொருந்த

மின்னாளனை பிடாரி என்றனைவரும்
　　விசுவேசரும் விரிசிலைநதித்தென்
மின்னுள்வரு மணிமுத்தமாநதி
　　மிகவும்வரும் வடகரையதனில்

தன்னல்வரு சுயம்பெனும்வேடுவர்
　　தவமேபுரி நவமணிநயினர்
தன்னல்வரு பள்ளிசைநாவளந்
　　தருவார்கள் பெரியோர். 3

தாஞ்கியபொருள்தரு முயர்திருத்
　　தவமாமுனி வோர்புகழிதையுரை
　சாமாரியென் றனைவருமூவகைத்-தருமானோர்

ஞானதிக ஞானமிசைகுறுமுனி
நவகோடிசித் தாதிகளுடனிரு
நயனதிக னிரணியசமர்பதி-நடுவானோர்

வானோரனு தினம்புட்பமாரிபொன்
மலர்தூவியர்ச் சனைசெய்துகதிபெற
வளமாநக ரணைநயினார்பள்-ளிசைகூறத்

தேனுகிய பாவலர்நாவலர்
செயமாதவர் பூதலர்மேலவர்
திருவாய்மலர் சேவடியனுதினம்-மறவேனே. 4

கலிப்பா.

பொன்னாலை யஞ்சூழ் புவிமாது மேவிவளர்
தென்னாலை நாடுபுகழ் தேசுநயி னார்வயலில்
நன்னாக வேயுழுது நடவுபயி ரேற்றுதற்குப்
பன்னாளும் பள்ளன்வரப் பள்ளியர்வந் துற்றாரே. 5

சிந்து.

வகிர்ந்தமுடிப் பூங்குழலில் நவ
மருக்கிளை தூவிய சொருக்குக ளிசைய
வச்சிரமணிக் குச்சொளிமின்ன
வாடைமஞ்சணை பிறைகூடிய நுதலும்
மிகுந்தபணி வளர்ந்தருமார்பி
விலங்கியபொன் மணிகளுங்குலுங்க
மின்னுகருங் குருவியின்வால்போல்
உன்னதவிழியினி லன்னமையெழுதி
சுகந்தமல ரலர்ந்தசெந்தாமரை
யுகந்தசெங்கையில் வளர்ந்தபொற்காப்பும்
சோதிமுகம் மாதியென்றுலகினில்
துதிக்கியைவாயினி லதக்கியபாக்கும்

* * *

சுகந்தமிய னடியிணைபோற்றக்
கூட்டியதிருமணக் கோலமுங்காட்டும்
கோட்டூருமூத்த பள்ளிவந்து தோன்றினாளே. 6

## சிந்து.

சிலம்பொலிக வீரிடவிருபதச்
சதங்கைகளும்பல விதம்பெறவொலிக்கத்
தேவர்பதிப் பெண்போலனுதினம்-பாவலர்புகழக்

குலம்பெருகுங் கூந்தலணிமலர்ச்
சாந்துசவாது பூந்துளபமிலங்கக்
குவளைவிழி யுருவநிறைந்த-இருநவமணிக்கோர்வை

கலந்ததிக மாலைகளுங்கன
தனங்களும்விந்தையும் பந்தடிமுழங்கக்
கருணைபெறவிளங் கோவையங்கனிவாய்-பொருணயம்பெருக

புலன்பொறிகளைந்துமொன்ருகியே
பூரணங்கீழணை மேலணைபொருந்த
பொன்மாரி இளையபள்ளிவந்து-தோன்றினளே. 7

## கலிப்பா.

கண்டா ருளமுருகக் கல்லிரும்பும் பொன்மெழுகாய்த்
தண்டா மரைத்திருவாய்ச் சந்திரோ தயமெனவே
விண்டார் பிறையணியும் மெய்நயினர் நன்னாட்டில்
வண்டாடும் பள்ளியர்கள் மாலழகு பூட்டினரே. 8

## சிந்து.

தானந்தனனு தானு தானந்தனனு தானு

வானும்புவியுண்டான காலந்தனிலேயேக
வஸ்துநிறைந்தபதி முத்திமுனியறிந்து
தானும்பூசனைசெய்து மானுமணக்கோலமும்
தள்ளாதைம்பதெழுத்துந் தனியானதோரெழுத்தும்
பானுமதியுண்டான காலந்தனிலேபள்ளன்
பார்த்தேசரடுகட்டி நேர்த்தியாய் வைத்தான்
கோனும்வளர்கண்ணணை நாடு சிறந்தபுகழ்க்
கோட்டூருமுத்தபள்ளி நானேயாண்டே. 9

செங்கைக்குடைகவரி தங்கப்பரிகரிசேர்
செங்கோற்கவுரிவல்ல துங்கராசேந்திரநாட்டில்
தங்கப்பொன்மாரிபெய்து திங்களுலகில்கலி
தாங்கிப்பெருமாள்பதி யெங்களூரே
பங்கப்படாதபள்ளன் சங்கைத்திருவடிவும்
படிபடியானபண்ணைக் குடியில்வந்தேன்
புங்கத்துடனயினார் தங்குகீழணைமேலணை
பொருந்துமிளையபள்ளி நானேயாண்டே. 10

## கலிப்பா

வித்தகி சவுந்தரமின் வேல்விழியென் றுய்ப்பத்தை
நித்தமறவாமல் நேசமுடன்கொண்டாடி
முத்தமிழ்சேர் கோட்டிபுர மூர்த்திநயி னாருளால்
நற்றவஞ்சேர் பள்ளியர்கள் நாட்டின்வளங் கூறுவமே. 11

## சிந்து

தெந்தினா தெந்தி னாதெந்தி னானா.

பூவில்வண்டி னிசைவுள்ளநாடு
புனிதமான திசையுள்ளநாடு
கோவில்குண்டு குளமுள்ளநாடு
குருவின்பாதம் பணிசெய்யுநாடு
நாவினின்று தமிழ்சொரிநாடு
நலந்திகழும் விதிசெறிநாடு
தேவிசுந்தரி கண்ணணையாகிய
தென்னாலைப்பதி நாடெங்கள் நாடே 12

மூலவாவிகள் சீருள்ளநாடு
முழக்கமான இரவிசேரிநாடு
நாலுவீதி சிறகிலிநாதர்
நடுவிருந்து வளர்ந்தருள்நாடு
பாலுந்தேனுங் கனிவுள்ளநாடு
பழகுவாசக் கினிதுள்ளநாடு
மாலைவாசஞ்சேர் கீழணைமேலணை
வளமைசேரிந்த நாடெங்கள் நாடே. 13

அண்டகோளம் பனிரெண்டுவீதிமுன்
னாதியானபொன் மாவலிராசன்
துண்டவெண்பிறை சூடியநாதர்
துவாதசாந்தப் பொருளிதென்றெண்ணிப்
பண்டைநாளிற் றிருப்பணிசெய்து
பகருந்தீபச் சிறப்புமுண்டாக்கித்
தென்றல்சோலை கதலிபலாவுஞ்
சிறக்குங்கண்ணைத் தென்னாலைநாடே. 14

பச்சைநீலக் கிரியுள்ளநாடு
படிக்கும்வேதம் விரிவுள்ளநாடு
சிச்சையான திருவுள்ளநாடு
திருப்பதிகள்நூற் றெட்டுள்ளநாடு
அர்ச்சனைத்திரு சேருயர்காங்கைய
ராசர்க்குமாரி பொன்மாரிபெய்து
மெச்சதோர்கலி தாங்கிப்பெருமாள்
விளங்குகீழைமேலைநாடே. 15

மாதர்கீதம் படிக்கின்றநாடு
வலம்புரிச்சங் கொலிக்கின்றநாடு
வேதகீதம் பலிக்கின்றநாடு
விளங்கியங்கள் கலிக்கின்றநாடு
போதஞானம் பொலிகின்றநாடு
பொருந்துநாத சதாசிவனாடு
தீதிலாத திருப்பணிசெம்பொன்
சிறக்குங்கண்ணைத் தென்னாலைநாடே. 16

தெருவீதி தெருவுள்ள நாடு
தேனாறுபாய்ந்து விளைவுள்ளநாடு
ஊருதோறுங் கருவுள்ளநாடு
உலகவாழ்வு திருவுள்ளநாடு
பேருசேர்கலி தாங்கிப்பெருமாள்
பெருக்கமாமறை யோருள்ளநாடு
மாருதம்பெறுங் கீழைமேலை
வளமைசேர்ந்த நாடெங்கள்நாடே. 17

தென்னஞ்சோலை மயில்விளையாடுந்
திரையின்மேவி யனம்விளையாடும்
மின்னுங்காவில் கனிரசஞ்சாடும்
விளைவுமாநிலஞ் செங்நெலைத்தேடும்
அன்னங்கோழி யருள்பதநாடும்
அதிகஞானப் பயிர்களைநீடும்
நன்னாற்கீர்த்திசே ரேழுகிளைப்பதி
நாலுநாடு நகரமீதாண்டே. 18

காய்ந்திருப்பது வேட்டிபுடவை
கறையிருப்ப தாவத்தின்கண்டம்
சாய்ந்திருப்ப தரிவையர்கொங்கை
சரிந்திருப்ப தரம்பையர்கூந்தல்
மேய்ந்திருப்ப தாண்மனைதோறும்
விளைந்திருப்பது செங்நெலுமுத்தும்
மாய்ந்திருப்பது சக்கரவாகம்
வளருங்கீழணை மேலணைநாடே. 19

மணிமுத்தாறு விரிசிலையாறிரு
மாலைசூடிய மான்மழுவுள்ளோன்
பணிபெற்றான கரியுரிபோர்த்தும்
பரமனாரிடப் பாகமிருக்கும்
அணிமுத்தார வழகுசவுந்தர
வம்மைபாதம் பணிந்தேயெந்நாளும்
துணிவுபெற்ற திருக்கோட்டிமாநகர்
சோதியம்பதி யூரெங்களூரே. 20

தேட்டினானிதி சேருமென்னூரு
தேனாறுபாய்ந்து விளைவுள்ளவூரு
கோட்டினார்குலஞ் சேருமென்னூரு
குலத்தினால்வகைப் பேருள்ளவூரு
பேட்டினான்மழை பெய்யுமென்னூரு
பெருக்கினாற்கவி கூருமென்னூரு
பூட்டுநற்பணிக் கீழணைமேலணை
பொன்மாரிப்பதி யூரெங்களூரே. 21

## கலிப்பா

ஆணாகப் பெண்ணுருவை யாக்கிவைத்த மெய்ப்பொருளைக்
காணத்தவமிருந்து காணார் பெரியோர்கள்
பாணத்தை யன்னவிழிப் பள்ளியர்கள் பொன்னயினார்
பூணத் தவங்கொடுக்கும் பூங்குயிற்குச் சொல்வாரே. 22

## குயிற் சிந்து.

தன்னானெ தானதனத் தன்னான தானதனத் தானாதனா.

திங்களணிதிருச்சடிலர் நயினார்கட்டளைப்படிகள்
தினந்தோறும் வளர்ந்தோங்கக் கூவாயேகுயிலே
மங்களகல்யாணிசவுந் தராமாதுபதிதோறும்
மலரின்வாசனைபொருந்தக் கூவாயேகுயிலே
சங்கைதரும் வயிரவருங் கருதுதளவாய்ப்பேரும்
சதாநித்தியங்கடிமுழங்கக் கூவாயேகுயிலே
புங்குடையார்குருந்துடையார் புகழ்பெரியகறுப்பருக்குப்
பூசைபடித்தரநடக்கக் கூவாயேகுயிலே
திசைபுகழுங்கும்பமுனி பணிந்தசுயம்பானதொரு
தெட்சிணாமூர்த்தியென்றுங் கூவாயேகுயிலே
புசபலம்பெருகிவள ரிசைகொள்நயினார்பதியில்
பொன்மாரிபெய்யவென்றுங் கூவாயேகுயிலே
முசுகுந்தன்மாவலியு முல்லாவும்போற்றுகின்ற
மூர்த்திபதிகீர்த்திபெறக் கூவாயேகுயிலே
முசியாத பண்ணைவயல் முத்துமுத்தாய்விளைந்து
மூன்றுலட்சஞ்சேருவைக்கக் கூவாயேகுயிலே
சிட்டர்புகழகத்தீசர் திருமதிற்பிரகாரம்
திருப்பணிகளுபயவென்றுங் கூவாயேகுயிலே
கொட்டமிடுநயினார் குலாவுசன்னிதிராச
கோபுரமுடியவென்று கூவாயேகுயிலே
சட்டமுடனைவகைப்பூ சணநவதிதிகள்
தாழ்விலாதிருக்கவென்றுங் கூவாயேகுயிலே

கட்டளைப்படிபெருகும் சிறகிலிநாதர்திருக்
கலிதாங்கியழகரென்றுங் கூவாயேகுயிலே

செகராசர்புகழ்முத்து வடுகநாதேந்திரதுரை
செங்கல்தழைத்தோங்கக் கூவாயேகுயிலே

பகைராசர்க்கொப்பம்விடுங் களரிவல்லேந்திரதுரை
பதியாளவரசுபெறக் கூவாயேகுயிலே

அகமேவுகோட்டிபுர மருள்வேதமறையோரு
மனைவோருங்கிளைவாழக் கூவாயேகுயிலே

சுகமேவுமீசுவர குருவடுகநாதமுகில்
சொர்ணமபம்பெற்றிருக்கக் கூவாயேகுயிலே

அகத்தீசுவரகுருவு மந்திரனுதகுரு
அன்னக்கொடிபெற்றிருக்கக் கூவாயேகுயிலே

இகத்திலேபொன்னயினு ரீசர்மலர்த்தாள்பணிந்தே
யெந்நாளும்பூசிக்கக் கூவாயேகுயிலே

அகத்திலேபொருறு மேலைவாசற்படிகள்
அஞ்சுவர்ணம்பெற்றிருக்கக் கூவாயேகுயிலே.

சகத்திலேமுனிவோருந் தானிகருமறையோரும்
சகலருங்கிளைவாழக் கூவாயேகுயிலே

நாட்டினிலதிகமெனு மேழுபதினாலு
நாடுமிகவளர்ந்தோங்கக் கூவாயேகுயிலே

தேட்டிலுயர்வணிகர்குல மேழுநகரம்மதிகம்
செம்பொன்வளர்ந்தோங்கக் கூவாயேகுயிலே

நீட்டுயர்வெள்ளையன்செட்டி மாயாண்டிபூமணிகர்
நீடூழி வாழ்ந்திருக்கக் கூவாயேகுயிலே

கோட்டிபுரமம்பலவர் குடியானபேர்கள்முதல்
கூத்தமொன்பதுந்தழைக்கக் கூவாயேகுயிலே

பதினாலுநாட்டிலுள்ள கூத்தமொன்பதும்வளர்ந்து
பலகிளையுந்தழைத்திருக்கக் கூவாயேகுயிலே

மதிபெருகுந்தேனாறு மணிமுத்தம்விரிசிலையும்
மாறுமல்வெள்ளம்வரக் கூவாயேகுயிலே

துதிமாதுகுடிகொண்ட சிகரகோபுரவாசல்
துலங்குமகமேருவெனக் கூவாயேகுயிலே
நிதிசேருதமிழ்சொல்லச் சந்தானசவுபாக்கிய
நிறைவாழ்வுபெற்றிருக்கக் கூவாயேகுயிலே. 23

கலிப்பா.

ஓதமதி யுமையாள் தேவியழ காயிபங்கில்
பாதிமதி சூடும் பரமாகத் தீசர்பண்ணை
நாதியருள் காணவயல் நடவுபயி ரேற்றுதற்குக்
கோதிலாப் பொன்னயினக் குடும்பன்வந்து தோன்றினனே. 24

சிந்து.

தன்ன தன்னுதன தன்ன தனனுதன

கதிக்கும்புவியரசர் துதிக்குநயினர்நாட்டிற்
கருணைப்பள்ளனெயிலா யுறுமாற்கட்டுநடையும்
மதிக்கும்வெண்ணீறணிந்து கறுக்கும்மீசைப்பரிசும்
மணக்குஞ்சாராயவெறி தனக்குந்தலைதொளக்கி
விதிக்கும்பதியைவென்று சதிக்கும்பஞ்சாட்சரமும்
விளைவுறும்பண்ணைவயல் நடவுபயிருஞ்செய்து
நதிக்கும்நதிவாத்துங் கெதிக்கும்கோட்டூரிருக்கும்
நாதிநயினக் குடும்பனுனேயாண்டே. 25

அானயினர்பதத்தைத் தினமும்நினையாதாரை
ஆரிருசமயங்கொண்டு நீறுய்ச்செய்வேன்
உரிமையாயஞ்செழுத்தி னுண்மைகொள்ளாதார்நெஞ்சை
உருக்குமண்வெட்டிகொண்டு நொறுக்கிவைப்பேன்
பரமதியாயிரத்தெண் பரிதிமலரைத்தொழார்
பட்டமாங்கொட்டையென்று தட்டிநெரிப்பேன்
வரகயிலாசப்பெருமாள் நயினர்பதியைக்காணு
மாடுகட்குநாய்க்கழிகோல் போடுவேனுண்டே. 26

## கலிப்பா.

அக்காரவஞ் சூடிநட்ட மாடுமகத் தீர்பண்ணைத்
தக்கதொரு பள்ளியர்கள் சாதி முறையே கூடி
மிக்கவெள்ளந் தென்னாலை மின்னாடு பொன்னாகத்
திக்கில்வளர் பள்ளரெல்லாந் தெய்வநிலை போற்றினரே. 27

## ஆனந்தக்களிப்பு-சிந்து.

### தானதன தந்தனனை.

பொன்மாரிபுவியெங்கும் பெய்ய-நாடு
புகழ்நயினார்கோயிலுக்கு முதற்பூசைசெய்யச்
சிம்மாசனமிருக்கு மழகு-எங்கள்
செகமாயிதேவிக்கு மஞ்சலொடுபுழுகு
வின்மானமூர்த்தியென்று விரும்பும்-கனகமணி
வேழமுகக்கணபதிக்கு முப்பழமுங்கரும்பும்
நன்மானக்கறுப்பருக்குக் கெந்தம்-சவ்வாது
நகைவகைவடைமாலை வயிரவர்க்குச்சொந்தம். தானை 28

புங்குடையார் பூசைகொள்ளவேணும்-அமுதுபடி
புதுமையுடன்கொடுத் திருகைபதம்லரைப்பூணும்
செங்கிடாய்சூலாட்டுப் பூசை-குருந்துடையார்
தேவதைக்குக் கொடுத்திடவு மாரிதருமாசை
மங்களமதாம்பெரிய கறுப்பர்-பால்பொங்கல்
மதுக்குழிக்கூத்தெருதுகட்டு வளமைபெறவிருப்பம்
தங்குபுகழ் மூன்றணையுண்டான-தேவதைகள்
தள்ளாதபூசைகொடுத் தெல்லோரும்வாரும். தானை. 29

## கலிப்பா

ஞானநெறி பரவு நற்றமிழ்க்கு வித்தகத்தான்
மூனவனைப் நின்றதவுஞ்சாமிநயி னார்நாட்டில்
கானவண் டோகையிடக் கடல்மேகங் கிழ்மாற
வானமுகில் கோலி மழைக்குறியுண் டானதுவே. 30

## மழைக்குறி.

தான தனத்தான தனத்தான தனனதனத்தான்
தனத்தான தனத்தான தனனு.

சோணகிரிதண்ணீர்வரக் காணுதுகுறி மயில்
தோகைவிரித்தாடுதிப்போ பேடுடன்கூடி
ஆனைமேகநீரைவாரி வாரியுண்ணுது வானம்
அடுத்தநட்சத்திரங்கள் தொடுத்துமின்னுது
கூனத்தைநண்டுகருக் கூடுகட்டுதுமழை
கூப்பிட்டொருசில்லர்வண்டு சாப்பிட்டாடுது
மானும்மழுவுந்தரித்த ஏகநயினர் பண்ணை
வயல்விளையும்பள்ள ரெல்லாஞ்செயலாகுவோம். தான 31
அந்தாமழைபொழிந்தால் விந்தையாய்நாமும்தண்ணீர்
ஆற்றுவெள்ளம்பார்த்துவர நேர்த்தியாய்போவோம்
சுந்தரவில்வமரந் தெப்பமதாகும்-பத்து
சூங்கிராங்கழியிலஞ்சு சூளுக்கையாகும்
சந்ததம்நிறைந்தேடுமண் வெட்டியரிவாள்-சிறு
சம்பங்கூட்டுக்கொங்காணி நிரம்பவேதேடும்
எந்தன்பரன்மூர்த்தியருள் சேருநயினர்பண்ணைக்
கேற்றபள்ளரெல்லோருங் கூத்தாடுவோம். தான 32

## கலிப்பா.

வேதாவு நீலவர்ண மெய்யினருங் காணுத்
பாதாம் புயநயினர் பண்ணவனர் நன்னாட்டில்
மாதாபி தாவும் வளர்குருவுந் தெய்வமதாய்
நீதாவு மாரிமழை நிச்சயமுண்டானதுவே 33

## மழைவரத்துச்சிந்து.

தெந்தினனத் தினதினனத் தினதினனத் தினதின.

விண்டலம்புகழ் தேவர்முனிவர் தெண்டனிட்டடி வணங்குதல்
வெள்ளைவாரணந் தவளம்போல்நிறத் துள்ளவாரணம்பணிகள்போல்

குண்டலிவளை நாடிமதி மண்டலமது கூடியே
கோடிபுனலைத் தரித்தசிவநின் றுடுங்கனலைத் தரித்தவர்
துண்டவெண்பிறை யணிந்தநயினார் கண்டங்கறுத்துப்பொழிந்த
சூழ்ந்துநாலு திசைகள்தோறும் எந்துவாடை குளிரவே [கார்
அண்டநாயகர் பதியெல்லாமழை சண்டமாருதம் பொழிந்ததால்
அடுத்தவர்மலர் தொடுத்தபள்ளிசை படித்தவர்கிளை தழைத்ததே ()

கறுக்குமேக மின்னியிடித்துப் பெருக்கமுழங்கி வானத்தில்
கடற்றண்ணீரை மொண்டுமுறித்துத் தடத்தில்நீரைச் சொரியவே
மருக்கள்பரவுஞ் சோமகிரியில் மழைகள்பெய்யும் வளமையால்
மணிமுத்தாறுங் குளம்பெருகி வயல்முத்தாக விளையவே
வருக்கையுழுவை மசரிகுறவை வாளைமீன்பனை யானைமீன்
வள்ளிக்கொடியிற் பாய்ந்துவான்மழை துள்ளிக்கொடியி லிறங்கியே
திருக்கையுடனே கெளிறுகூடிச் சினைவராலுடன் கெண்டைமீன்
சேர்ந்துமச்சங்க ளனேகங்கோடி பாய்ந்துமெய்த்தடத்திருந்தவே()

வர்ணமயிலுங் குயிலும்பேடும் மணிப்புறாவுடன் பணிப்புறா
வாரிக்குருவி கிளிப்பிள்ளைகவு தாரிக்குருவி பெருக்கமாய்
கன்னல்முகு தென்னைமாதளை கதலிமாமரச் சோலையில்
கலந்தவரவர் கனிகளருந்தி வளர்ந்தகோபுரஞ் சிறந்ததால்
அன்னங்குருகு செங்கால்நாரை வன்னச்சிறகி யன்றிலும்
அணிமுத்தான பறவைகள்முதல் மணிமுத்தாநதிப் பெருக்கத்தில்
சொர்ணமயம தாகவந்தரத் தொண்ணூற்றாறு சாதியும்
சோதிமாமணி நயினார்பதியிற் கீதம்பாடிய தினங்களே. (36)

திரைகடலுக்குஞ் சோமகிரிக்கும் செகதலத்துக்கும் ஒன்றதாய்க்
சிறந்தகுறிஞ்சி பாலைமுல்லை திகழுமருத நெய்தலும்
கரைகள்மேடு குண்டுகோபுரம் கலந்துசங்கீதம்பிறந்திடக்
கடியவனத்திற் செடிகள் மரங்கள் கலந்துபரந்து பாவியே
நுரைகள்வளர்ந்து அலைகள்மிகுந்து நொடிக்குள்காதம் பிடிப்பதாய்
நூற்றெட்டுத்திருப் பதிசிவாலயம் ஏற்றிப்பணிந்து நேர்த்தியாய்
வரைகளுயரக் கோட்டிமாபுரத் திருமதில் பிரபலமதாய்
மணிமுத்தாநதி பெருகியேவரும் வளமைபாரும் பள்ளியரே. 37

### கலிப்பா.

கோத்திரமுஞ்சாதிக் குலந்தழைக்க வந்தபிரான்
நாற்றிசையோர் போற்றுநயினர் திருநாட்டில்
சாத்திரமும் வேத சரநூல் விசாரணைக்கும்
பார்த்திபனுங் கோட்டூர்ப் பண்ணையான் மேருன்றினனே. 38

### சிந்து.

தெந்தினை தினதினை தினதினைதின
தெந்தேந்தினன தினதின தினன.

பாசிப்பல்லுங் கூன்முதுகும் பேழைவயிறுங் காட்டில்
பச்சோந்தி போல்நடையு முச்சில்முகமும்
ஊசிபோல் மிடறுமெய்யும் பூனைவிழியும் பசை
ஒட்டுவைத்த மீசைபோல்பத் தெட்டுமயிரும்
வீசுகையில் தடிக்கோலும் ஊளைமூக்குங் கும்பி
வீழ்சுரைக் காய்த்தலையும் ஏறு நெற்றியும்
வாசனை பாவுமுனி பூசனைசெய்யுங் கோட்டூர்
வாய்த்தபண்ணைக் காரருமிங் கேற்றமாய் வந்தார். 39

பொய்க்களவுத் தாச்சிபேரைச் சொக்கியென்பாராங் கோவில்
பொன்னெடுத் தொளித்தபேர்க்குப் பின்னையென்பாராம்
குக்கல்கடி நாய்வளர்த்த கக்கிசப்பேரை இன்னம்
கூட்டியே தட்டுத்தடியால் மாட்டு மென்பாராம்
மெய்க்களவ ரைக்கழுவில் வைப்பே னென்பாராம் குளம்
மீன்பிடித் தொளித்தபேர்க்குத் தாம்புசெய்வாராம்
தக்கபுகழ் சேருமகத் தீசர்பதியை ஒரு
தாண்டில்வலஞ் சுற்றித்தடி யூன்றி நிற்பாராம். 40

ஏகநயினு ரிடப்பாகம் வளரும் அழ
கீசுவரியைத் தோத்திரஞ்செய் தேத்தி நிற்பாராம்
தாக விவேகமுடன் மேலைவாசலில் ஒரு
தாள்திறந்து நாலுமஞ்சும் பார்த்து நிற்பாராம்
ஆகமத்துள் ளேபுகுந்து மாயை சிறந்த பதி
ஆறையுங்க டந்துகன வூரில் நிற்பாராம்
வாகம் சிறகை விரித்தாடும் வெளியில்இரு
வச்சிரச்சி லம்பொலியால் மெச்சிநிற்பாராம். 41

## கலிப்பா.

செந்தமிழ்க்கு வேண்டுஞ் சிருசவு பாக்கியமும்
சந்ததமேன் மேலுந் தழைக்குநயி னூர்நாட்டில்
வந்தபண்ணைக் காரர் மலரடியைச் சேவைசெய்து
கந்தமலர்க் குடும்பன் கரங்குவித்துக் கொண்டானே. 42

## சிந்து

தெந்தினைத் தினதினைத் தினதினை.

கும்பிடுகிறேனாண்டே கும்பிடுகிறேன்
கோட்டூருப் பண்ணையாண்டே கும்பிடுகிறேன்
நம்புமடி யார்களுக்கு அன்புபுரியும் கோட்டூர்
நயினுரு பண்ணையாண்டே கும்பிடுகிறேன் 43

தொந்திவயிற் றைங்கரனைக் கும்பிடுகிறேன்
தொடுகுறிப் பண்ணையாண்டே கும்பிடுகிறேன்
முந்திமுதலானவரைக் கும்பிடுகிறேன்
மூவருக்கு மூத்தவரைக் கும்பிடுகிறேன். 44

அக்கரவணிந்தவரைக் கும்பிடுகிறேன்
ஆதிவஸ்துவாண்டையரைக் கும்பிடுகிறேன்
முக்கனியுகந்தவரைக் குடும்பிடுகிறேன்
மூலமணிநாயகரைக் கும்பிடுகிறேன். 45

செங்கதிர் மதியிலங்கும் பண்ணையாண்டே
தெண்டனிட்டு அடியார்கள் கும்பிடுகிறோம்
பங்கய மலர்சிறந்த பண்ணையாண்டே யிரு
பதம்பணிந் தடியார்கள் கும்பிடுகிறோம். 46

## கலிப்பா.

ஆறுசடையும் புனலும் அற்புதமாஞ் சிற்பரத்தில்
பேறுதர வந்த பிதாநயினுர் நன்னாட்டில்
வீறுதரும் பண்ணை விசாரிப்பான் முன்புசென்று
தூறுசொல்லி மூத்தபள்ளி தொழுதுமுறை யிட்டாளே. 47

### சிந்து.

*தன்னந்தாந் தனத் தானனத் தானனா.*

பள்ளன்தான் சொன்ன புத்தியுங் கேளாமல்
பண்ணையில் விரைக்கோட்டைநெல் லெல்லாம்
கள்ளந்தான் மூத்தபள்ளி சொன்ன புத்தி
காரிய மென்றுபே ரறியாமல்
உள்ளன்பாகிய கீழணை மேலணை
யுற்ற பள்ளிக்கு நித்தங்கொடுத்தான்
துள்ளுங் காலியுஞ் செந்நெலும் பொன்னும்
சுதைகொடு வைத் திருந்தது மாண்டே. 48

செய்கள்தோறும் விளைந்திடு முத்துக்கள்
சேரு வற்கமும் கட்டியிருக்கப்
பையவே யிதைச் சோரஞ்செய் தானிந்தப்
பாதிராத்திரி சோதனை யாகத்
துய்ய கீழணை மேலணைப் பள்ளிக்குச்
சொர்ணமாலைக ளின்னமுஞ் செய்ய
ஐயமெங்கணுங் கண்டு மகிழ்ந்தே
அடங்கலையுங் கொடுத்தான் காணாண்டே. 49

### கலிப்பா.

மூத்தபள்ளி வேதமொழி யுரைத்துப் பள்ளனையும்
எற்றமுட னெங்களையு மென்றுரைக்கப் பள்ளிளையாள்
நேற்றிரவெல்லாம் பள்ளன்நீள்வரத்து மேல்வரத்தாய்
ஆற்றவொண்ணா தென்றுசொன்னா ளுண்டேயென வுரைத்தாள். ()

### இளையபள்ளி புலம்பல் சிந்து.

*தன தானதான தனனா தனதனத் தனதானத்தான தனனா.*

சதிரான காலமெல்லாந் தேடியுண்ட சக்களத்தி மூத்தபள்ளிதான்
முதிரானவார்த்தைபேசி நேற்றிரவு முடுக்கியே எழுப்பிப்போனாள்
கதிரோனுதயாதியில் வேலையில்போனான் காணேனிரண்டுநாளாய்
மறுநாளுதயமாச் சென்மனதில் மாறாதிருக்குதாண்டே. 51

கூடிய கனகசபையில் திருநடனக் கூத்தாடவென்று துணிந்தே
ஆடியருள்சேரு நயினர்பண்ணையாண்டையர்க்குமீண்டுசொல்வேன்
நீடியமணிமுத்தாறு பெருகிவர நேற்றிரவு போனபள்ளனை (ன்ன
தேடியேயழைத்து வராமல் மூத்தபள்ளி சேதிமெத்தச் சாதிப்பதெ

## கலிப்பா

காப்பிடுபொற் கையாள் கனகமணிப் பூங்குழலாள்
கோப்பினிய பள்ளனையுங் குச்சினில்வைத் துச்சிதமாய்
ஏப்பினிதாய்ச் சொன்ன மொழி யென்றுபண்ணையாளிடத்தில்
சாப்பிதமாய் மூத்தபள்ளி சாதிவளங் கூறினளே. 53

## மூத்தபள்ளி யேசல் சிந்து.

*தான தந்தந்தான தந்தான தனனு*

ஆற்றுவெள்ளம் பார்த்துவரப் போன பள்ளன் தானென்
னண்டையி லிருந்தா லென்ன குண்டணியடி
பார்த்திருக்க நானுங்கூட நேற்றிரவுதான் பள்ளி
பச்சரிசி குத்திமருந் துச்சினை யடி
காத்திருந்து கண்டவள்போல் வார்த்தை சொன்னையேபள்ளனைக்
காட்டியே குடிவிற்சென்று கூட்டியேவாடி
சாற்றிய வசனப்பள்ளன் காதில்விழுக மெள்ளச்
சன்னையாய்க் குடிவிருந்து பின்னையும்வந்தான்
சன்னையாய்க் குடிவிருந்து வந்தபள்ளன்மேல் வெகு
தாகிதையாய்ப் பண்ணைக்காரன் கோபம தாகி
அன்னையழ கீசுவரிக்குச் சீதனம்வந்த பள்ளியிடம்
அச்சமற வாழ்ந்திருக்க நிச்சயமுண்டு
பின்னையொரு பள்ளியென்று மூத்தபள்ளிதான் அவளுடனே
பேசா திருந்தாலொரு காசாகுமோ
உன்னையும் வசனமொன்று பின்னையுஞ் சொல்வேன் பள்ளா
உற்றபண்ணைச் சேதியைமுன் செப்படாவென்றாள். 54

## கலிப்பா.

மறவாமலே நமசி வாயமென்று பேசினர்க்குப்
பிறவா நெறிகொடுக்கும் பேர்நயினர் நன்னட்டில்
இறவாப்பொன் னும்விரையும் எருநெல்லுஞ் சீருமுதல்
திறவாய்ச் செலவிருப்புஞ் சென்றுபள்ளன் விண்டானே 55

## சிந்து.

தெந்தினனத்ததின தெந்தினனன.

ஆதியாய்நயின ரழகம்மைக்கு
ஆதியாய்மணஞ் சூட்டியபோது
ஆதியாய்முனி வோர்மறையோர்களும்
ஆதியாய்வேத கீதமுழங்க
ஆதியாய்மணி மண்டபமேடைபொன்
னாதியாய்முத்துத் தோரணஞ்செய்து
ஆதியாய்க்கலி யாணத்துக்கான
தடங்கலுஞ்செலவாச்சுது ஆண்டே. 56

முத்துமாணிக்கக் கல்லுநவமணி
முல்லைமாலிகை தன்னில்நிறைத்து
பத்திரண்டறு நூறுமோராயிரம்
பாலிக்கவிரு நாழிநெல்லுண்டு
கொத்துமண்வெட்டி கூனரிவாளுங்
கொழுவுமாளிகைக் காணிநிறைத்த
வித்துண்டானபொன் செந்நெலுங்காலி
விளக்கமாவைத் திருக்குதுஆண்டே. 57

பண்புசேருயரன்னை பொன்னுள்பச்சை
பாலிசூலி பருவமின்மாது
அன்புவைத்தே யடியடிவாழைபோல்
ஆதிநாளிலிள சைநகரத்தில்

186078
சென்னை-600 008

செம்பொன்வெள்ளையன் செல்வக்குபேரனிசால
சேருமாயாண்டித் தீரனிடத்தில்
இன்பநல்வெகு மாணிக்கக்கல்லூமிக்
கேற்றமாய்வைத் திருக்குது ஆண்டே. 58

கலிப்பா

கோட்டூருப் பண்ணவனர் கூர்ந்துபள் ளனைப்பார்த்துக்
கேட்டபடி யெல்லாங் கேளுமென்று சொன்னபின்பு
வாட்டமிலாப் பண்ணை வயல்சே றமேற்றக்
கோட்டூ ரிருந்தாண்டிக் கோன்வந்து தோன்றினனே. 59

சிந்து.

தானத்தந்தனத் தானனு தனத் தானதந்தனத் தானனு.

ஆட்டுக்குட்டியுந் தோளின்மேல் மனை
யாகிய தேவியுங் கூடியே
கூட்டுப்பால்தயிர் நெய்யுடன் ஆண்டிக்
கோனுமுன்வந்து தோன்றினன்
பேறுதந்துபதி றைதாயதின்
பின்பு வந்தசுதை யானதாய்
ஆறுகண்டவகத் தீசுரர்பதி
ஆண்டிக் கோனும்வந்து தோன்றினன். 60

0-1892 K
N30

சிச்சையாகவைத் தெழுத்தையும் நெஞ்சில்
திண்ண மாகவைத் திடாதபேர்
கொச்சையாட்டுக் குட்டி யென்றுதா னண்டிக்
கோனுந்தேவியுடன் தோன்றினன்
பாலிக்குமெய்ஞ்ஞான மூர்த்தியாம் நயினர்
பண்ணை வயலெல்லாந் திண்ணமாய்க்
கோலிச் சென்றூட்டுர மேற்றவே யாண்டிக்
. கோனுந் தேவியுடன் தோன்றினன். 61

### கலிப்பா.

ஆயர்நயி ஞர்பதியி லற்புதமாய் வந்தேசி
வாயநம வென்று சிவசரணஞ் செய்தபின்பு
சேய வயல்முழுதுஞ் சென்ருட் டூரமேற்ற
நேய பண்ணை யானுக்க நின்றபள்ளன் சென்ருனே. 62

### விருத்தம்.

குடும்பனும்வயலிற் சென்று கோனுட னூமு மேற்றி
நடம்புரி யிளையாள் வீட்டில்நன்னய மாகச்சென்று
இடம்பெற விற்றி ருந்த வியலதையுணர்ந்து மூத்தாள்
திடம்பெறும் பண்ணையான்முன் சேதியு முரைக்கின் ருளே. 63

### சிந்து

தானதந் தனத்தானனத்தானு.

ஆட்டினிற்கிடை சற்றுமறியான்
அடுத்தவீட்டில் நடத்தைகுறியான்
மாட்டினில்திரிந் தாயன்சகோதரி
மாதவளகத் தீசர்க்குமாலே
பூட்டுநாள்வந்த சீதனப்பள்ளிசெம்
பொன்னிடையாளை வீம்புக்குவைத்தான்
கோட்டூர்மாதர் குலாவுங்குடும்பனைக்
கூட்டியேமதி மூட்டுவீராண்டே. 64

முன்னைநாளிற் சதாசிவந்தோன்றி
முதியசெங்கை நதிகள் பாந்து
அன்னதானக் கொடியுள்ளநாளையில்
ஆதியாய்வந்தேன் சாதியிற்பள்ளி
பின்னையும்மணஞ் சூட்டிவைத்தென்னைப்
பெருமையாய்வைத் திருப்பதுமெய்தான்
சன்னைபேசிய பள்ளனுக்கேமாஞ்
சாத்துவீர்குட்டை சாத்துவீராண்டே. 65

## சிந்து.

தந்தனத்தானு தனதன தந்தனத்தானு.

குண்டுணிபறையான் முன்னெனை அண்டினதுரையான் இப்போ
கொடுமையைவிடுத்தான் இளையவள் அடிமையை யடுத்தான்
தெண்டினைக்காளாம் நீர்சொன்ன மன்றினில் கேளான் வரவரத்
தெளிந்திடுங் குள்ளன் இனியசொல் வளர்ந்திடும்பள்ளன். 66

மாணிக்கக்கல்லும் அரையினிற் பேணிக்கச்சொல்லும் வாரி
வச்சொருபொதியில் இளையவள் குச்சொரு பதியில்
ஆணிப்பொன்போலே பொத்தாணிக்கன் காளை பறை
ஆதிக்கங்கொடுத்தான் நாவிதழ் சோதிக்க விடுத்தான். 67

செம்மறைக்காளை ஆறையும் நன்மறைக்களித்தான் ஈரைந்து
செம்புகமயிலை பெருமாள் தன்பதிக் களித்தான்
முன்மறைச்சுழியன் ஆரிரு முலைகுடி கன்றும் விற்றது
முதலுக்குமோசம் காப்பிடு மதலைக்குவாசம்
கூப்பிட்டுப்பாரும் ஈரெட்டுத் தாப்பிட்டுத்நீரும் இரண்டினில்
காப்பிட்டுக்கொண்டான் இளையவள் மூப்பிட்டா னுண்டே. 68

## கலிப்பா

பள்ளியுரைத்தபின்பு பள்ளனும்வந் தேதொழுது
உள்ளங்குளிரவய லாரமேற்றி வந்தேதென்று
தெள்ளிமையாய்ப் போற்றிசெய்து தெண்டனிட்டா னப்பொழுது
வள்ளிதாய்க் கூட்டி மரக்குட்டை சாத்தினரே. 69

## விருத்தம்.

குட்டையி லிருந்த பள்ளன் கொடுஞ்சிறைக் காவல்போதும்
திட்டமா யேகமூர்த்தி திருவிளை யாட்டென் றெண்ணி
அட்டதிக்கெங்கும் பார்த்து அறிவுட னிருக்கும்போது
யிட்டமா யிளைய பள்ளி யியம்பினள் புலம்பினளே. 70

## இளையபள்ளி புலம்பல் சிந்து.

*தன்னனந்தான தனனதனந்தானனத் தானனு.*

ஐபாநயினு ரடுமைக்கிது வென்னஞாயமோ பண்ணை
யாண்டைக்கு மூத்தா ளுரைத்ததினல் வந்தமாயமோ
செய்யபுகழ்திருக்கோட்டி புரத்துக்கு வாய்த்தவள்முன்
செப்பிய வார்த்தையை யொப்பினையாக்கிய மூத்தவள். 71

தூறுசொன் னுளென்று நீரு நினைக்கவு மாச்சே அன்ன
சுத்தமெல் லாங்கிளை நித்த நினைக்கவுமாச்சே
வேறு தவிர்த்தென்னை யாளும்பராபர மூர்த்திபதம்
வேண்டி யிருக்கவு மீண்டு செய்தீரிந்தக் கீர்த்தி. 72

வட்டத்துள் ளேதிருவாசி விளக்கிட்டுப் போற்றுங் கலை
வாசிச் சிலம்பொலி பேசிய வாசலில் தோற்றும்
திட்டத்துள் ளேகண்டு குட்டைமரமதை நாட்டினர் நிதி
தேடிய பள்ளனென் றுதிசொல்மதி மூட்டினர். 73

பொன்னுங் கிரியுள்ள பூமா தழகுமின் மாதுதான் இப்போ
பூதலம்போற்ற நவநிதி சேருமிப் போதுதான்
முன்னும் பழகின கோட்டூருப் பள்ளிக்கு நேசமாம் தமிழ்
மூதறிவானவ ரீசருக் கேயிது வாசமாம். 74

## விருத்தம்.

நாட்டமா யிளையபள்ளி நாவினு லுரைத்தசேதி
தேட்டமா யிருந்தபள்ளன் சிறப்புடன் முதியாள்வந்து
மீட்டினிக் கொள்வாளென்று விளம்பியே யுரைக்கும்போது
வாட்டமில் லாத கோட்டூர்ப் பள்ளியுந்தான்வந் தாளே. 75

## சிந்து.

*தன்னனத் தானனத் தானனத்தானு.*

பள்ளனும் பள்ளியைக் கண்டபின் பூமியைப் பார்த்தான் முன்
பாசவினை யெல்லாந் தள்ளியருள் தனைச்சேர்த்தான்
கள்ளந்தெளிந்து கண்ணேறிட்டுப் பார்த்தவன் பேசினன் வலு
காயக்கக் காரியின் கண்டிப்பைத் தீரென்று பூசினன். 76

கண்டிப்பைத் தீரென்று என்னிடஞ் சொல்லாதே குடும்பா உன்
கண்ணூட்டி யான விளையாளிடஞ் சொல்லு குடும்பா
திண்டாட்ட மான விளையவள்மேன் மனந்தோணுதோ அவள்
செய்வ ரிசைகண்டு மெய்வரி சையின்னம் பூணுதோ. 77

பூணவிருந்துநீ வார்த்த சோறுண்டு நின்குச்சினில் ஏக
போகமதாய்க்கூடி வாழ்ந்திருப்போ மனமச்சினில்
ஆனரசெங்குந் தழைத்திடப் பள்ளனுரைத்தபின் பண்ணை
யாண்டையைக் கண்டு வணங்கி யிருகை குவித்தனள். 78

ஆண்டகுருவே பணிந்துனைக் கும்பிட்டேனையா இப்போ
அடியாளோர் விண்ணப்பஞ் செய்கிறேன் கேளுங்கா ணுண்டே
வேண்டுவ தெல்லா நயினூர் கிருபை யுண்டெனக்கும் இப்போ
வீற்றிருந்து குட்டைசேர்த் திருந்தபள்ளன் தனக்கும். 79

தீராத வல்வினைதீர்க்கும் இகபர மூர்த்திவேண்டுஞ்
செல்வங் கொடுத்தென்னைச் சொர்ணக் கலியெல்லாம் மாற்றி
சோராதநாளாம் பதவியருளும்பொன் னயினூர் பண்ணை
தோன்றியநாள்முத லாண்டுகொள்வீர் பண்ணை யாண்டே. 80

வெள்ளாமை நாளல்லோ மாரிகால மேன்மேலும் பள்ளம்
மேடுதிருத்திப் பயிரிடவும் பண்ணை யாண்டே
கள்ளாமையாகவே நானிசஞ் சொன்னேன் காணுண்டே பள்ளன்
கால்மரக்குட்டை கழற்றிவிடும் பண்ணை யாண்டே. 81

எனக்காய்மனம்பொறுத் தீடேறச் செய்திடுமையா பயி
ரேற்ற வெள்ளாண்மைக்கு வாய்த்தவன்காண் பண்ணை யாண்டே
தனக்கா யிளையவள் கீழணைமேலணைப் பள்ளிசெய்த
சங்கைக்கு நான்சொன்ன விங்கிதங்காண் பண்ணையாண்டே 82

கீழணைமேலணை கண்ணணை யென்றுமுன் வகுத்து வெகு
கீர்த்திபெருக நால்வகைச் சாதியுந் தொகுத்து
ஏழுகிளைபதி னுலுநன் னூடெங்கும் விளங்க இந்த
இரவிசேரி நாடெனுங் கயிலாசவயல் பண்ணை யாண்டே 83

ஊமையெழுத்துப தேசமுமக்கல்லோ தெரியும்கதி
ரோங்கிவளர்ந்தருள் கோணவயல் பண்ணை யாண்டே
சீமைபுகழ்மதி சந்திரமண்டல மேவுஞ் சிவ
சின்மய தேசி பரவயலில் பண்ணை யாண்டே 84

அப்பால் வணங்கி நயினர் பதத்தைப் பணிவான் பண்ணை
யாண்டை சொன்ன புத்தி கேட்கவுமேமனந் துணிவான்
முப்பாலுஞ்சோறுங் கொடுத்துங்கள் பள்ளனைக்கிள்ளைபோல்
[கூட்டி
முகூர்த்தங் கொண்டுபயி ரேற்றிடுவீர் பெற்ற பிள்ளைபோல். 85

## கலிப்பா.

சாதுரியீ மூத்தபள்ளி தானுரைத்த சொற்படியே
கோதரிய பள்ளனையுங் குட்டைமர நீக்கியபின்
வேதரிய பண்ணை விசாரிப்பான் முன்புசென்று
மாதுரிய வித்துவகை மாட்டுவர்க்கஞ் சொன்னனே. 86

## சிந்து.

தன தனத்தானத்தன ன.

சீர்பெறு மாப்பிள்ளைச் சம்பா கொடிவெள்ளை
சின்னெறங்கல் மணவாரி சொரி குரும்பை
ஏர்பெறும் வாழைப் பூச்சம்பா துய்யமல்லி
ஈர்க்குச் சம்பாக் காடைக்கண்ணி குங்குமவெள்ளை. 87

கார்பெறும் வெள்ளைக் கொசும்பா ராமநாதன்
கடப்புவாகு சம்பா சிவத்த நெல்லும்
தார்பெறுஞ் சீரகச் சம்பா நெல்லுவகை
சாதியிலனேகம் வைத்திருக்கு தாண்டே. 88

ஒற்றைக் கொம்பன் கரும்போரன் சுப்பிரமணியன்
உளிக்கொம்பன் செம்பறையன் நெளிவாலன்
சித்துமறைச் சுட்டி மயிலை கூடுகொம்பன்
செந்தலைவயிறன் குட்டை பில்லை மேழை 89

கர்த்தாருள்சேருநயி னார்பே ரிட்ட
காளைபஞ்ச கல்யாணி கண்ணாடி வெள்ளை
சுத்தசுழி சூரியன் சோமன் சுரபிகள்
தொகையி லனேகமுண்டு மெய்கா ணுண்டே 90

கருவுயரா திபாவும் காரைக்
கருங்கொம்பு கருங்காலி ஏற்கா லும்
மருவுயர் பாலமரத்தின் கூன்குத்தி
வாகனமேழிவெள்ளை நவ்வல்நிகமும் 91

குருமணி யுழக்கோ லும் வடக்கயிறும்
கொழுவுமெழு பத் தீராயிரமுண்டு
திருமலரணிநயினர் பண்ணைவயல்
சேருநாளேரிட வாருமாண்டே. 92

## கலிப்பா

பார்வதி யென்றுயழகி பண்ணைநயி னக்குடும்பன்
சீர்முறை யானதெல்லாஞ் செப்பியபின் னெப்பனையாய்ப்
பார்புகழு மெய்ஞ்ஞானப் பஞ்சாங்கங் கைப்பிடித்து
ஆர்மதிசேர் கோட்டூரில் ஐயங்கார் தோன்றினரே. 93

## சிந்து.

அடிக்கடி பஞ்சாங்கம் பார்த்துக்கொள்வார் அரி
ஆதிகிர்ஷ்ணவென்று போற்றிக்கொள்வார்
நொடிக்குள்ளே விரலெண்ணிக் கூட்டிக்கொள்வார் லெக்கம்
நூற்றெட்டுக்குள்ளாக நாட்டிக்கொள்வார்
படிக்குள்ளே பனிரெண்டைச் சாற்றுமென்பார் இந்தப்
பாரினில் மழைமெத்தத் தோற்றுமென்பார்
வடித்த செந்தமிழ் மெத்தவளருமென்பார் பண்ணை
வயலில் நாளேரிட்டுக் கிளறுமென்பார். 94

## கலிப்பா.

ஐயங்கார் பஞ்சாங்க மானசுப யோகமுதல்
மெய்யங்காச் சொன்னபின்பு மீண்டுபள்ள ரெல்லோரும்
கையங்காப் போற்றிக் கைலாசப் பண்ணைவயல்
செய்யங்கா நாள்முகூர்த்தம் சேறுமுழச் சென்றாரே. 95

## சிந்து

தெந்தினனத் தினதினனத் தினதினனத் தினதினு.

திருவன் பழனியாண்டி சிலேயன் முருகன்
சின்னான் குருந்தன் பிச்சன் சித்திரன் காளே
கருவனுருவன் பெர்க்கன் காளியழகன் முத்தன்
காத்தான் கறுப்பன் வீரன் சாத்தன் பெரியான்
முருக னுடையா னண்டி மூளி யரியான் புங்கன்
மூக்கன் வெளுக்கான் பள்ளர் சேர்க்கைய தெல்லாம்
குருநயினார் பண்ணைவயல் முழுதும் பள்ளர்
கூடியே நாளேரிட்டு நாடியுழுதார். 96

நாடியே குரவையிட்டுக் கூடியுழுது பள்ளர்
நாலுவரப்புந் திருத்தி மேலுமையாக
ஓடியே பரம்படித்துக் காளேப்பாட்டும் பாடி
யுழுது முடிந்தபின்பு வளமைபெற
கூடியே விரைதெளித்து மறுநாளில் தண்ணீர்
கூர்ந்துபாய்ந்து மறுமூன்று நாளில்
நீடிய விதைமுழுதும் பூரித்தெழுந்து குடை
நின்ற பயிரதுபோல் வளர்ந்ததுவே. 97

சீரியர் பரவுகின்ற கண்ணணை யானதிருத்
தென்னலே நாடுமுதல் பண்ணைய தெல்லாம்
கூடியே தொளிசமைத்து நாற்றிலிறங்கி முடி
கூட்டி மதுவுண்டு வெகு தாட்டிகமாக
பாரிய திருமந்திரம் பானுமதி யுளமட்டும்
பாலும் பழமுஞ் சகல பாக்கியம் வர
வாரியே குரவையிட்டு நடுகைச் சிந்துகள் பாடி
வந்தார்கள் பள்ளியர்கள் வந்தார்களே. 98

## நடவைச்சிந்து.

*தின்திஞனத் தினதிஞனத் தினதிஞன்த் தின்திஞ.*

செல்லியழகி மல்லிமகமி செம்பியம்பி சிறைபிலி
சிலைச்சிபேச்சி மலைச்சிகுருந்தி சின்னிபொன்னி சிவத்தியாள்
நல்லிமுருகி பழனிசிலம்பி நாச்சிபூச்சி மெய்யுளாள்
நாகிபூவி யேகிதேனி நம்பிவகிறி வெம்பிலாள்
அல்லிசெம்பக வல்லிகறுப்பி ஆதிகாளி யாவிடை
அணைவருந்தொண் ணூற்றாறுகிளையுண் டானநயினர் வய
[லுள்ளே
நெல்லுநாற்றைக் கையிலெடுத்து நீடுநாலு திசைகள்நோக்கி
நிரையைவகுத்துக் குரவைமுழக்கி நிகழ்ந்துநீர்நடும் பள்ளி
[யரே. 99

அடையாளே யன்னநடையாளே பொய்யைப்
படையாளே மெய்க்குடையாளே
ஆதியே பரஞ்சோதியே யபி
ராமியே வலு நேமியே
இடையாளே வாழைத்துடையாளே முக்கண்
ணுடையாளே யணைக் குடையாளே
ஈசுவரி பரமேசுவரி யெனை
யீன்றவள் புரமூன்றவள். 100

குடையாளே விழிக்கடையாளே சன்ன
விடையாளே மதிக் கொடையாளே
கோனிச்சி பரமேனிச்சிகோட்
டூரிற்சிறந்த வழகம்மை
சடையாளே யழகுடையாளே தொழு
தடையாளே யெனப்பாடியே
சவுந்தரமாது வயலெல்லாம் நீரைப்
பகிர்ந்துநீர்நடும் பள்ளியரே. 101

சன்னிதிவாசல் நாற்றங் கால்களி லுன்னதமாக வளர்ந்த சீரகச்
சம்பாநாற்றைப் பறித்துநயினர் சாமிசங்கரன் வயக்கலும் [லும்
பொன்னிதிசேரும் நாச்சியார்செய்யும் புகழ்திரு வொற்றிவயக்க
பூதலம்புகழ் வடக்குத்தலைகள் புளியடிச்செய் தாவுச்செய்
உன்னதமான குருந்தடிவட்டம் முள்ளிப்பள்ளம் ஆலஞ்செய்
உட்கிடையான நிலமெல்லாம் நாற்றுநற்கிடையாக நடச்செய்
அந்நியான பாக்கியம்பெற்றதெய் வானைக்கிளைய வள்ளியை[தேன்
ஆண்டிக்குடும்பன் பெற்றமுருகன் தூண்டிப்பார்க்கிறான் பள்ளி

மனதுகந்தடுத்தபேர்க்கு மாதவர்க்கு மெய்யதாய் [யரே
வாசிநிலையும் மக்கள் பவிசும் வரந்தரு நயினர்பண்ணை
தனதுபூங்குடி நாச்சியார்செய்யும் கொப்பன்செய்யுடன் சிலம்பன்
சார்ந்துபிறவும் பிள்ளையார்வய லேந்தல்பிறவு நடச்செய்தேன்
கனதனம்பெற்ற நரிவெட்டிமகள் கறுப்பிநாத்தினுள் பெரிச்சியைக்
கண்ணைக்காட்டி யழைத்திடுநீலப் பண்ணைக்குடும்ப னேடியே
உனதுகையினில் வளையென்றானதுக் குறவுமெய்யினில் குழையெ
[ன்றான்
உரைத்தவுடன்கை நொடிப்பதுகும்மி யடிப்பதும்பாரும் பள்ளி
[யரே.

வெற்றிசேரழகுள்ள நாச்சியாள் மேவிய நயினர்பதம்
விரும்பியேதினம் பூசிப்பவர்க்குப் பொருந்து புத்திரசந்தானமும்
நித்தியசுபமும் நீடூழிகாலம் நிறைந்தமைந்தரைத் திணந்தரும்
நீலகண்டன்செய் சோற்றுச்செய்வட்டம்வேளான்வயக்கல் பூலாஞ்
[செய்
அத்திவட்டங் குறும்பாவயக்கல் அடுத்தபொன்னங்கால் வயக்கலு
அச்சன்செய்மேல் வெட்டுச்செய்யுடன் ஐயனர் வயலிவைமுதல்[ம்
சித்தியாய் நாற்றுநடச் செய்தேனன்னம் முத்தியாள் பெற்ற பரமி
[யை
திருவக்குடும்பன் பேச்சிட்டுக்கொள்ளும்உரிமைபாரும்பள்ளியரே.

கங்கைவளருஞ் சிறுகிலி கலிதாங்கிப்பெருமாள் வயலுள்ளே
கருத்தணைமுக்காணி நடவே கண்டேனே யொருகாட்சிதான்
எங்கேயுங் குத்துக்கல்லுண்டானாலும் எழுத்திலுமிந்தச் சொல்லு
ளரிபோலே பொன்மாரிதோணுதுஎற்றமொழி சாற்றியே[ண்டாம்

கொங்கையாளிடைப் பள்ளிபொன்பதுகோடிபசும்பொன் நாடியே
குத்துக்கல்லினில் கண்டேனெனவும் முத்தக்குடும்பன் சிறகிலி
நங்கையாள்கோவில் தங்கப்பொன்னுக்கு நானல்லோகல்லு நாட்டி
நாட்டினகீர்த்தி வளரவேதங்கக் கூட்டமாமடி பள்ளியரே. [னேன்

அஞ்சுகெவுளி கீழணை நகருஞ்சமாகாளி வயலுள்ளே
அடுத்தசாந்து புறவெல்லாநாற்று நடச்செய்தேனொரு கிழப்பள்
பஞ்சுபோல்நரைத் தலையுந்தாடியும் மிஞ்சுபேழை வயிறுமாய் [ளன்
பண்டுவரப்பில் நண்டுக்காலைக் கண்டல்லோபள்ளன் தாண்டினன்
தஞ்சுகவடி பாவியோடித் தாங்கினளொரு பாங்கிதான் [ன்னன்
சாதனைப்பள்ளக் கிழவனேயென்று சோதனைக்கொரு மொழிசொ
இன்சொல்பேசியே நழுவினன்வெறி மிஞ்சல்போலத் தழுவினன்
எச்சதுபயிராச்சது பள்ளன் வாய்ச்சதுபாரும் பள்ளியரே. 10

ஐந்தருவளர் மேலணைப்பதி செம்பொன்மாரி வயலுள்ளே
அன்புள்ள வயல்வளருஞ் சீரகச்சம்பா நாற்றை நடச்செய்தேன்
இந்திரனுமக் குடும்பன்மகனுக் கிளையவனொரு பயலவன்
ஏருழுகின்ற செய்க்குள்ளே கனபேருளவையைக் கைக்குள்ளே
தந்திரமுடன் பிடிக்கின்றான் பள்ளச்சன்னிக் கிளையபொன்னியும்
தாவென்றாளிங்கே வாவென்றான்கன பூவென்றானது புகலவே
சுந்தரமதி வதன லீலைகள் துய்யவனருள் செய்யவே
தொடுத்தவனங்கேகிட்டக் கிட்டப்போய் அடுத்ததுபாரும் பள்ளி
[யரே.

செகதலம்புகழ் கண்ணணையான தென்னலைநாடு பதினொரு
சேர்க்கையான கிராமவகையெல்லாம் ஏற்கையாய்நாற்று நடச்செய்
அகிலியும்பள்ள வுலகியும் பொருளாச்சியும் ஈகரைநாச்சியும் [தேன்
அங்கயற்கண்ணியும் வேலியுந்திருச்செங்கைவளைகள் குலுங்கவே 8
முகுதமருதங் குமுதமடித்து மோடியாய் நிரைகூடியே
முன்னின்ற பெரியாளிடைப் பள்ளியென்னென்று மதிகூறினள்
சகசமாமென்று சகத்திலெங்களைப் பிசகெண்ணமலே போற்றியே
சட்டமாயொரு திட்டமாய்நிரை கட்டதும்பாரும் பள்ளியரே. 106

மாணிக்கமணிமகுட முடிபொன்னணிப்பொன்னிறையொத்ததாய்
வாசிக்கும் வடதேசிக்கு மிடநாசிக்குங் குருவானவர்
வேணிக்குரு முக்காணித்திரு முத்தாணிச் சந்திரவுதயமே
மேவிக்கலந்து தாவிப்பாந் துலாவிச்சிறந்து பெருக்கமாய்
பேணித்தவ மெய்ஞ்ஞானப் பயிர்களுணிக் கதிர்முன்னுகவே
பிறங்கிக் குரவை முழங்கி யேசன்னைபேசிப்பேசி வாசிபோல்
காணிப்பெருஞ்சொல் வாணிநயினர் கடவுளார் பண்ணை வயலெ
கட்டுக்கலநெல்காணவேநிரைநட்டுநீர்வாரும்பள்ளியரே. 109[லாம்

கலிப்பா.

அந்தமுள்ளவேதம் அவ்வுமுவ்வு மாகிநின்று
சந்தனச்சோ லைபரவுஞ் சாமிநயினர் நாட்டில்
விந்தையுட னூற்று விரைந்துநட வேசெழித்துக்
கந்தமலர்ச் செந்நெற் கதிரோங்கி வளர்ந்ததுவே 110

சிந்து.

தானதனதந்தனனதந்தனதந்தனதந்தனதந்தனன

விளைந்தகதிரைக் கண்டுமகிழ்ந்தான் மனதில்
வேறொரு சிந்தையை இகழ்ந்தான்
குழந்தைவடிவேலரைப் பணிந்தான் நாளுங்
குருவினுப தேசத்தில் வளர்ந்தான்
அன்னமய மின்னளை நாடினன் நயினு
ராநந்தப் பொருளைக் கொண்டாடினன்
மின்னுங் கதிரறுக்கநினைத்தான் பண்ணை
யாண்டைக்கு விண்ணப்ப முரைத்தான்
கூனிரும் பாற்கதிர்கொய்தான் அரி
கூட்டிப்புரி முறுக்கச்செய்தான்
தானொரெழுபத் தீராயிரங் கதிர்கட்டித்
தயவாகச் செந்நெல் போர்வேய்ந்தான். 111

சூரியன் சோமனைப்பிணைத்தான் நடுவே
சுழிமுனைக் காளையை யணைத்தான்
பாரிய பஞ்சகல்யாணி கரும்போரினைப்
பையப் பிணைத்துமெள்ளப் பேணி
இப்படிப் பிணையலுண்டாக்கினன் பொலி பொலி
யேகபஞ்சாட்சரந் தாக்கினன்
அப்படியே வைக்கோல்பிடித்தான் பள்ள
ரனைவோரும் பொலிமெத்தக் குவித்தார்
தூற்றிப் பெருக்கிப் பொலியளந்தான் தொண்
ணூற்ருறு சேரிவளர்ந்தான்
ஏற்றிருபத் தோராயிரத்தறு
நூற்றுக் கலநெல்லுத் தொகைகண்டான். 112

## கலிப்பா.

நீடும் பொலியளந்து நிட்கரணை செய்தபின்பு
நாடும் பதினு லாயிரத்திச் சில்வானம்
ஆடும் புகழ்நயினு ரறைவீட்டி லேசேர்த்துத்
தேடுமதின் மீதி செலவுமிகச் செய்தனரே. 113

## சிந்து.

தெந்தினை தெந்தினைத் தினதினு
தினதெந்தே நாதினனதினத்தின தினை.

மிக்கசதுர்க் கோணமதிற் கவுரிவி நாயகர்க்கு
மேலான பூசைசெய்ய நாலுபொதி நெல்லும்
தக்கதொருபிராமணுள் போசனஞ் செய்வதற்குச்
சம்பாநெல்லாறுபொதி தென்பாகவளந்தேன்
பக்கதிருப்பாற்கடலிற் பள்ளிகொளுமழகருக்குப்
பத்துப்பொதிநெல்லுவெகு நித்தமுறவளந்தேன்
செக்கர்மதிருத்திரபரன் திருக்கோவில்படிகட்டளை
சிறந்தபனிரெண்டுபொதி யளந்தேன்காணுண்டே. 114

வேதாந்தமறைபுகழும் ஆதிமாயேசுவரிக்கு
விளங்குபதினாறுபொதி களங்கமறவளந்தேன்
நாதாந்தசொரூபமணி பூசையனுகூலமுடன்
நையாமலிரண்டுபொதி துய்யமதிநெல்லும்
பாதாந்தமூவணைத் திருக்கோட்டி புரநயினார்
படித்தரத்துக்கன்பத்தொரு பொதிநெல்லொருமுதலாய்
மாதாந்தமூவணையி லுண்டானகோவில்கட்கு
வகைக்காயிரம்பொதிநெல் தொகைக்குள்ளளந்தேனே. 115

குடித்தாம்பெருகிவளர் கோட்டூர் நயினார்மீது
குளுவநாடகம்பள்ளுக் கூர்ந்துகளிகூர்ந்து
படித்தபேர்க்கனுகூலன் கவுரிவல்லேந்திரதுரை
பட்சமுள்ளமூன்றணை நாட்டவர்களெல்லோரும்
வடித்தபுகழ்சாம்பிராச்சிய பட்டயங்கொடுத்ததொரு
மாத்தால்குறுணிவகைக் கேற்றமுடனளந்தேன்
அடித்தரஸ்தானிகாள் நிருவாகம் அனைவோரும்
அன்னசுத்தங்கிளைவாழ அளந்தேன்காணாண்டே. 116

சொரிகுரும்பைமணவாரி துய்யமல்லிபாற்கடுக்கை
தோற்றமுளநெல் லாயிரத்தெட்டுக்கோட்டை
வரிசைபெறவிருபூவில் இணையவிரைவற்கமுதல்
வளர்ந்தேறவேவிரைக ளளந்தேன்காணாண்டே
அரியதிருக்கோட்டிபுரம் அழகியமின்னாள்பதியில்
அளவில்லா நெல்சேரும் தொகைசொல்லப்போமே
கரிமுகர்பண்ணையான் முன்னாகவேகுடும்பன்
கைலாசநாதரைத் தொழுதுபணிந்தேனே. 117

### கலிப்பா

அன்புயரு முற்கணக்கும் அவள்கணக்குஞ் சொன்னபள்ளன்
என்பேரு மென்கணக்கும் இயல்பாய்ச்சொல் லாததினால்
முன்பேறு தந்துதவும் முக்கனிவாய்ப் பண்ணையனும்
தன்பேரு ருஞ்செலுத்தச் சண்டைக்கிடம் பேசினாளே. 118

## சிந்து.

### தந்தனத்தன்னான தனாதந்தனத்தானா,

கொக்குப்போல் வெளுத்தநரைப் பண்ணையாண்டே அடியாள்
கூறும் விண்ணப்பங்கேளும் பண்ணையாண்டே
பக்குமுழி விக்கலுறு பண்ணையாண்டே புதுப்
பானைவயி றானைமுகப் பண்ணை யாண்டே
செக்குப்போலிருக்கு மூத்த பண்ணையாண்டே நாளும்
தேவாதி தேவர்தொழும் பண்ணை யாண்டே
அக்கேயக்கே தாரமும் ரெண்டானாலுந்தான் பள்ளன்
ஆச்சரியக் களிப்பைக் கேளும் பள்ளியரே. 119

பொங்கா வணிந்தவகத் தீசர்நயினார் திருப்
பொன்னடி தொழுநயின பண்ணைக் குடும்பன்
ஐங்கரனுதயதிருச் சீரகச் சம்பா வகையில்
அருமையாய்ப் பேறுபெற்று உரிமையுடன்
சங்கரன் வயக்கல்பெரு நெல்லையெல்லாம் இளைய
சக்களத்தி வீட்டில்கொண்டு சிக்கெனச் செய்தான்
சங்கரனெனக்குச் சற்றே பேறுதந்தான் என்று சொல்லிச்
சாவிநெல்லுக் கலந்துதந்தான் பள்ளியரே. 120

## வேறு சிந்து.

திண்டுமுண்டு சொன்னதென்ன கண்ணணைப் பள்ளியெங்கள்
செம்மைப் பங்கெனக்குத் தந்தால் செல்லாதோ சொல்லு
செல்லுமென்ற கீழணைப்பொன் மேலணைப் பள்ளியிது
செங்கருடன் முன்னரவ மாடுமோ சொல்லாய். 121

ஆடாவமென்று சொன்னாய் கண்ணணைப்பள்ளி ஆதி
யக்கருடன் முன்னரவ மாடுமோ சொல்லாய்
அறிவற்ற மையல்கொண்ட பள்ளனுக்கு மேதின
மாசைவலை மூட்டினையே மருந்துக் கள்ளி. 122

மருந்திடுங் கள்ளியென்று வார்த்தைபேசியே வெகு
மாசாலம் படிக்கின்றாய் கண்ணணைப் பள்ளி
மாசர்லங் கீழணைப்பொன் மேலணைப்பள்ளி பள்ளன்
வளமைபெனக்குள வசமானது சொல்லாய் 123

வளமைசேர் கண்ணணைத் தென்னாலை நாட்டார்கள்
மாத்தால் குறுணிமிக வைத்துக்கொடுத்து
கிளைகதி ருள்ளமட்டும் மாறாத செல்வம்வந்த
கேலிமதம் பேசுகிறாய் கண்ணணைப்பள்ளி. 124

மாறாதசெல்வம் வளர்ந்தேறுதென்று சொல்லவந்தால்
வாகீசுவரி யெனது நாவி லிருந்தாள்
பேறான கீழணைப்பொன் மேலணை நாட்டவர்கள்
பொன்னாபரண முனக்கென்ன தந்தார். 125

பொன்னிறைந்த முத்துவடந் தங்கவளை சேரிவளை
பூணாரம் வேணதெல்லாம் மாதளம் பூச்சேலையும்
அன்ன சொர்ணமுடன் வெகுமாத்தால் குறுணிதந்து
ஆதியானகாலமெல்லாஞ் சோதிமணிபோல். 126

ஆதிகலிதாங்கிய அழகர்பதிபள்ளியுநான்
அந்தமுள்ள பள்ளனுக்கு வந்தநாளில்
சீதனங்கொடுத்தவர்ணச் சேலையும்பொன்மாலைகளும்
செம்பொனிடையாபரணம் ரெம்பவுமுண்டு. 127

ரெம்பவுங்கலிதாங்கி மாலழகரைப்பணிந்து
நேர்த்தியான கீழணைப் பொன்மேலணைப்பள்ளி
கம்பமதகுஞ்சரத்துக் கன்புடனே பேறுதந்த
காட்சிகண்டுசொன்னேனிது தாட்சிணையல்ல. 128

ஆட்சிகயிலாசவரைக் கோட்டூர் நயினார்பதத்தை
யன்புடன்பணிந்ததென்ன கண்ணணைப்பள்ளி
காட்சியுள்ளகும்பமுனி வாய்ச்சுதென்று பூசைசெய்த
காரணமதானபரி பூரணமல்லோ. 129

பூரணமாமாயர்குலப் புத்திரியையுந்திருப்
புத்திரனதாகவுஞ்செய் துத்தமமுடன்
வாரணமதாகவுமே முல்லாவும் மாரியையும்
வாய்பேசவைத்த கயிலாசரிவர்தான். 130
ஈசர்கயிலாசரென்றுய் கண்ணணைப்பள்ளி எங்கள்
இளையநயினர் செயலின்னமுஞ்சொல்வேன்
காசினியோர்புகழ் கருங்கல்லையும் பெண்ணுக்கிவைத்த
கலிதாங்கியழகரைத் தொழுதறிவேன். 131

அறிவுள்ளபூசனைசெய் காங்கேயராசருக்கு
அன்புடனேபொன்மாரி பெய்தநாளில்
சிறகிலிநாதர் கலிதாங்கியழகர்பதந்
திண்ணமுடன்பணிகின்றேன் கண்ணணைப்பள்ளி. 132

திண்ணமுள்ளகீழணைபொன் மேலணைப்பள்ளிநாளும்
திருக்கோட்டியூர்நயினர் பதம்பணிந்து
வண்ணமுடனிருவருங் கிளைகூடிவாழ்ந்திருக்க
மங்களக்கும்மி யடிப்போம்பள்ளியரே. 133

## கலிப்பா.

சித்தர்கண நாதரொடு தேவாதி தேவர்தொழும்
வர்த்தனைசேர் பொன்னயினர் வச்சிரமணி வாசல்தனில்
மெத்தவுமே மனமகிழ்ந்து மெய்யிலங்கப் பள்ளியர்கள்
கொத்துமணிரத்தினமின்னக் கும்மிவிளை யாடினரே. 134

## பள்ளியர் கும்மியடித்தல்.

அம்புவிபோற்று நயினர்மீதரு
ளாநந்தக்கும்மித் தமிழ்பாடக்
கும்பவயிறன் விகடதடமத
குஞ்சரத்தாள்துணை காப்பாமே. 135

ஆருக்குந்தெய்வ நயினர்மீதரு
ளானந்தக்கும்மித் தமிழ்பாடப்
போருக்குயர்ந்த வடிவேலர்திருப்
பொன்னடியெந்நாளும் நான்மறவேன். 136

உத்தமலெட்சண நித்தநிறைந்திடு
மோங்குபுகழ் நயினர்மீதில்
முத்தமிழாற் கும்மிப்பாட்டுரைக்க ஆதி
மூலபுராணமுங் காப்பாமே. 137

கீழணைமேலணை கண்ணணையெந்நாளுங்
கீர்த்திபெற வெகுநேர்த்தியுடன்
நாளுமணைக் கும்மிபாருங்கோடி
எந்தன்நாவில் சரசுவதி முன்னிற்கவே. 138

முன்னிற்குங் கோட்டிபுரநயினரிட
முன்னிற்குமாதழ கீசுவரியாள்
கன்னிக்கு மாலையிடுநாளிற் கயற்
கண்ணிக்குகந்த மணவாளன். 139

வாழ்கயிலாசகிரி மேருமதி
வளருஞ் சோமகிரியுடையான்
நீள்திருமாமணி முத்தாறுத்தரம்
நீடுவிரிசிலை நன்னதியான் 140

நன்னதிபாண்டிவளநாடன் எந்தன்
நாவிற்கிசைகோட்டியூர் நகரான்
வர்ணச்சதங்கைகள் தெய்வலோகம்முதல்
வாசிக்கும் வாசிப்பரியுடையான். 141

வாசிக்குமுன்மத குஞ்சரத்தான்வெள்ளை
வாகனரிஷபகேதனத்தான்
தேசிக்குகந்திடுமுன் முரசாம்படி
செங்கோல்செலுத்திய ஆணையினன். 142

செங்கோல்செலுத்தி யரசாண்டார் மிக்க
தேவர்முனிவரும் போற்றிசெய்தார்
மங்காத வைந்தெழுத்தோரெழுத்தாய்நின்ற
வரகயிலாசர் வங்கிஷத்தான். 143

வங்கணப் பள்ளியரெல்லோருங்கூடி
மங்களமாகக் குரவைசெய்து
அங்கசனைப்பொருளா மணக்கும்பண்ணை
யாண்டையை வாழ்த்திக்கொண்டாடுங்கடி 144

நாற்கோணச் சக்கரமண்டபமாமதில்
நாயகன் பாதத்தைச்சேவை செய்து
தீர்க்கமுடனிதழாருகும் பிர்மா
தேவிசரசுவதியைத் தொழுவோம். 145

கூடியிருந்துவளர்ந்தருள் பச்சைமால்
கோலத்திருமகளைப் பணிந்து
நாடியேருத்திரன் ருத்திரிபாதமும்
நான்மூன்றுபாதம் போற்றுங்கடி 146

வித்துமயேசுவான் சத்திசவுந்தரி
மேவுமிதழ் பதினாறுகும்
சத்திசதாசிவன் வாலைமனோன்மனி
தன்...ருபொற்பதம் போற்றுங்கடி. 147

மூடுதிரையுண்டு வாசலுண்டு அதில்
முச்சுடரொன்ருய முழக்கமுண்டு
ஆடுஞ்சிலம்பொலி யோசையுண்டு அந்த
ஆச்சரியங்கேளும் பள்ளியரே. 148

ஐம்பத்தோரட்சர மேற்பதியாமதில்
ஆதிவஸ்துவென்று மூலவஸ்து
விம்பத்தின்மேற்கிரி தீபவஸ்து நடம்
வேடிக்கை பாருங்கள் பள்ளியரே. 149

வாசியென்றும் அம்மாவாசியென்றும் எந்தன்
வாசியென்றும் வாசிதீபமென்றும்
தேசியென்றுங் குருதேசியென்று
மிந்தச்செல்வந்தானடி பள்ளியரே. 150

அண்டபேரண்ட பகிரண்டமாமதில்
ஆதிபராபரன் வீதியிலே
தொண்டுபணி மலரிட்டாரேயவர்
சோதிமுனே முறையிட்டாரே. 151

## வாழி.

கோட்டூருப்பள்ளிசைக்குத் திருமால்வாழி
குகன்வாழி தந்திமுகக்குழந்தைவாழி
எட்டூருமிரவிசேரி நாடுவாழி
என்னாவிற் குடியிருக்கும் பொன்னாள்வாழி
ஆட்டூருபேராறு தலமும்வாழி
அணைமூன்றுபதினாலு நாடும்வாழி
நாட்டூருந்தென்னாலை நாடுபோற்றும்
நயினார்தன்மெய்வாழி வாழிவாழி. 152

## வாழிக் கும்மி.

கீழணைமேலணை கண்ணணையென்பவை
கிளையுடனெந்நாளுந் தான்வாழி
நாளிணையேழு கிளையுடன்பதினாலு
நாடுநகரமும் வாழியதே. 153

வேதமறையோர் மழைவாழியென்றன்
மெய்யிலங்கும் வடுகநாதகுரு
போதநாடும் மகத்தீசுவரரென்னும்
புண்ணியனார்கிளை வாழியவே. 154

கோட்டூர்நயினார் திருமதிலாலயங்
கோபுரமுஞ்செய்து கீர்த்திகள்சேர்
தாட்டிகன்வெள்ளையன் செட்டிமாயாண்டித்
தயாளனும் நீடூழி வாழிவாழி. 155

செந்திரு மேவுமிந்தத் திருப்பணி வள்ளல்வாழி
மந்திர மறையோர்வாழி மன்னவர் செங்கோல்வாழி
சுந்தரச் சிறையிலீசர் தொழுகலிப் பெருமாள் வாழி
சந்ததங் கோட்டூரீசன் சந்நிதி வாழிவாழி. 156

கோட்டூர் நயினார் பள்ளு

முற்றிற்று.

—